வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 16.09.2023 சனிக்கிழமை | இதழ் : 279 | பக்கங்கள் : 16

# ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியா முதல் நடுநிலையாளராக வேண்டும்!

## சிறீதரன் எம். பி. கோரிக்கை

கிளிநொச்சி, செப்ரெம்பர் 16

“36 ஆண்டுகளுக்கு முன்விட்ட தவறுகளைப் புரிந்து கொண்டு ஈழ தேசத்தைப் பாதுகாக்கவும் அதனூடாக தென்கோடியில் இந்தியாவின் பாது காப்புக்கு நட்புமிக்க சக்தியாக ஈழத் தமிழரின் தாயகத்தை உருவாக்கவும் தயாராகவேண்டும். அதற்கான முதல் நிலை நடுநிலையாளராக இந்தியா தன்னை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.”

11



## மக்களுக்கான கோரிக்கை!

கொழும்பு, செப். 16

நாட்டில் வேகமாக பரவிவரும் போதைப் பொருள் அச்சுறுத்தலை உடனடியாக கட்டுப் படுத்துவதற்கும் ஒழிப்ப தற்கும் நடைமுறைப்படுத் தப்பட வேண்டிய வழி முறைகள் குறித்து முன் மொழிவுகளையும் கருத்து களையும் அனுப்பிவைப் பதற்கான வாய்ப்பு பொதுமக்களுக்கு வழங் கப்பட்டுள்ளது.

நாட்டில் வேக மாகப் பரவிவரும் போதைப் பொருள்

11

## சனல் - 4 காணொலி குறித்து விசாரிப்பதற்கு குழு நியமனம்!

கொழும்பு, செப். 16

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சனல் - 4 காணொலியின் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக குழு ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி எஸ். ஐ. இமாம் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவில் ஓய்வுபெற்ற விமானப் படைத் தளபதி ஜயலத் வீரக்கொடி, ஜனாதி பதி சட்டத்தரணி ஹர்ஷ ஏ. ஜே. சோஸா உள்ளிட்ட வர்கள் அடங்குகின்றனர். (ஐ)

## 65 வயது வரை மருத்துவர்கள் சேவையாற்றுவதற்கு அனுமதி!

கொழும்பு, செப். 16

அரச சேவை விசேட மருத்துவர்கள் மற்றும் மருத்து வர்கள் 65 வயது வரை சேவையை நீடிக்க அனுமதி வழங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சுகாதார சேவையில் ஏற்பட்டுள்ள சிக்கல் களை குறைப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. இந்த நடவடிக்கை தொடர்பான அமைச் சரவை பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல

11



## திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் ஆரம்பமானது

யாழ்ப்பாணம், செப். 16

தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவு தினம் தமிழர் தேசம் எங்கும் நேற்று ஆரம்பமானது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளரான லெப். கேணல் திலீபன் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1987 செப்ரெம்பர் 15ஆம் திகதி உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தார்.

11



வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய பூங்காவன உற்சவத்தின் போது வள்ளி, தெய்வயானை சமேதராக முருகப் பெருமாள் எழுந்தருளினார்.

## சர்வதேச நிபுணத்துவத்துடன் ஈஸ்டர் தாக்குதல் விசாரணை

### கோருகிறார் கரு ஜெயசூரிய

கொழும்பு, செப். 16

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை பின்ன ணியாகக் கொண்டு சனல் - 4 அலைவரிசை ஒளிபரப்பி இருக்கும் விடயங்கள் தொடர்பில் உண்மையை அறிந்து கொள்ளும் பூரண உரிமை இந்த நாட்டு மக்களுக்கு இருக்கிறது. அதனால் அதுதொடர்பான விசாரணை களை தாமதிக்காமல் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான நிபுணர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளவேண்டும் என அரசாங்கத்தை

11

## காணாமல் போன பொலிஸ் உத்தியோகத்தர் சடலமாக மீட்பு!

கிளிநொச்சி, செப். 16

கிளிநொச்சியில் காணாமல் போன பொலிஸ் உத்தி யோகத்தர் சடலமாக மீட்கப்பட்டார்.

அம்பாந்தோட்டை - வலஸ்முல்லை - பன்சல கொடையை சேர்ந்த லியனகே சத்துரங்க என்ப வரே இவ் வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

மலையாளபுரம், புது ஐயங்கன்குளம்

11

## யாழில் நடக்கும் குற்றங்களை 10 நாட்களில் கட்டுப்படுத்துக!

### அமைச்சர் டக்ளஸ் உத்தரவு

யாழ்ப்பாணம், செப். 16

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மணல் கடத்தல், கால்நடைகள் கடத்தல் மற்றும் ஏனைய குற்றச் செயல் களை 10 நாட்களுக்குள் கட்டுப்படுத்துமாறு கடற் றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தரவிட் டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், யாழ் மாவட்ட இராணுவ கட்டளை

11

## 17 மனித எலும்புக்கூடுகள் கொக்குத்தொடுவாயில் மீட்பு!

முல்லைத்தீவு, செப். 16

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி இடத்தில் கடந்த 9 நாட்களாக தொடர்ந்த அகழ்வில் 17 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முழுமையாக மீட்கப்பட்டன.

கடந்த 6ஆம் திகதி ஆரம்பமான அகழ்வு பணியில் 9ஆவது நாளான நேற்று 3 எலும்புக்கூடுகள் முழுமை யாக அகழ்ந்தெடுக்கப்பட்டன. தடயப் பொருளாக விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் இலக்கத் தகடு ஒன்றும் ஆடைகளும் இலக்கங்கள் காணப் பட்டன.

இந் நிலையில் இதுவரை ஒன்பது நாட்கள்

11

## கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழும் பணிகள் இடைநிறுத்தம்!



முல்லைத்தீவு, செப். 16

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக அறிவிக் கப்பட்டுள்ளது. அத்துடன், இந்தப் பணிகள் மீண்டும் ஒரோபார் மூன்றாவது வாரத்தில் ஆரம்பிக்கத் திட்ட மிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மனிதப்புதைகுழி அகழ்வாய்வில் ஈடுபட்டு வந்த தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் ஏற்கனவே

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான சி. வி. விக்னேஸ்வரனின் கோரிக்கை கடிதம் தொடர்பாக இந்தப் பத்தியில் எழுதாமல் கடந்து செல்ல முடியவில்லை.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் இணைந்து இந்தியப் பிரதமர் மோடியை சந்திக்கவேண்டும் என்றும் அதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்திருக்கிறார். அதற்காக அவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் விடுத்திருக்கும் கோரிக்கை கவனத்துக்குரியது.

'கஜேந்திரகுமார் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிரானவர் என்ற போதிலும், அரசமைப்பில் உள்ள விதிகளை அமுல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அவர் இந்த நேரத்தில் உணர்ந்துகொள்வார் என்று நான் நம்புகின்றேன். 13ஆவது திருத்தம் தொடர்பாக இலங்கை அரசுக்கு இந்தியாவால் மட்டுமே அழுத்தம் கொடுக்க முடியும். தற்சமயம் மக்களால் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம் எமக்கு இல்லாவிட்டால் அரச திணைக்களங்களை எதிர்க்க முடியாது. படைகளும் பௌத்த பிக்குகளும் தமிழர் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்', என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்தியாவில் அடுத்த ஆண்டு மே மாதம் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. மோடி அரசாங்கத்தை எந்த விலைகொடுத்தும் வீழ்த்த வேண்டும் என்ற நிலையில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து 'இந்தியா' என்ற பெயரில் கூட்டணி ஒன்றை அமைத்திருக்கின்றன. இதனால் பலத்த போட்டியை எதிர்கொண்டிருக்கும் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி ஒவ்வொரு மாநிலங்களிலும் அதிகபட்டமான எம். பிக்களை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்று கணக்கிட்டு தேர்தல் பணியாற்றி வருகின்றது.

இந்தநிலையில், ஈழத்தமிழர் விவகாரத்தில் தம்மாலான உதவிகளை செய்து தமிழர்களுக்கு உதவுவதன் மூலம் தமிழ்நாட்டில் மக்கள் மனங்களை வெற்றிகொள்ள முடியும் என்று மோடியின் பாரதிய ஜனதா கட்சி முயன்று வருகின்றது. அதற்காகவே பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை இலங்கைக்கு விஜயம் செய்திருந்ததும் கவனத்துக்குரியது. இந்தநிலையில், இவற்றைக் கவனத்தில் எடுத்துள்ள விக்னேஸ்வரன் பதின்மூன்றை அமுல்படுத்துமாறு தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ஒருமித்த குரலில் கோரிக்கை வைத்தால் அது மோடியின் கவனத்தைப் பெறும் என்றும் அவரும் தேர்தலுக்கு முன்னதாக அதனைச் செய்ய முயற்சிசெய்யலாம் என்றும் கருதுவதில் நியாயம் இருப்பதாகவே தெரிகின்றது.

பதின்மூன்றாவது திருத்தம் என்பது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பலனாக உருவான ஒன்று. அதனை நடைமுறைப்படுத்துமாறு கோருகின்ற அதிகாரம் இந்தியாவுக்கு இருக்கின்றது. எனவே, அதனை தமிழ் தலைவர்கள் ஒருமித்து கோரிக்கையாக வைக்கின்றபோது அது இந்தியாவிலும் பலரதும் கவனத்தைப் பெறும். அவ்வாறு கவனம்பெறுகின்றபோது அதனை செயற்படுத்த வேண்டும் என்ற அழுத்தம் பா. ஜ. கட்சிக்கு தவிர்க்கமுடியாததாகிவிடும்.

அண்மையில், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான முறுகல் அதிகரிக்கின்றபோது, இந்தியா தமிழீழத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்கலாம் என்று புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்திருந்தார். இதுபற்றி இந்தப் பத்தியிலும் பார்த்திருந்தோம். ஏற்கனவே பல தசாப்தங்களாக இதேபோன்ற கற்பனையுடன் காலத்தைக் கடத்தியதுபோல இன்னும் எத்தனை தசாப்தத்துக்கு அதேபோன்ற கற்பனையுடன் காலத்தை கடத்தப் போகின்றோம் என்று இந்தப் பத்தியில் கேள்வி எழுப்பியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். ஆனால், அதனை படித்துவிட்டு தமிழகத்தின் மூத்த பத்திரிகையாளர் ஒருவர் இந்த ஊர்க்குருவியுடன் தொடர்புகொண்டு, சித்தார்த்தன் சொல்லியது சற்று மிகைப்படுத்தப்பட்டதாக இருந்தாலும் இந்தியாவுக்கு தமிழர்களின் உதவி தேவை என்ற நிலை விரைவில் வரும். அதனை தமிழ் தலைமைகள் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டிருந்தார்.

இப்போது ஈழத்தமிழர்களுக்கு தேவையானது ஒரு பலமான தமிழ் தலைமைதான். அது எல்லா கட்சிகளும் கூட்டாக பயணிக்கின்றபோது தான் ஏற்படும் என்ற அவரின் கோரிக்கையையும் நிராகரிக்க முடியவில்லை. அதைத்தானே இந்த ஊர்க்குருவியும் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றது.

- ஊர்க்குருவி.

# கட்சியின் வெற்றிக்காக பாடுபட்டு அரசியல் அநாதையாகிவிட்டேன்!

### முஜிபுர் ரஹ்மான் கவலை



கொழும்பு, செப். 16

ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றி பெற செய்ய முயற்சித்து தான் அரசியல் ரீதியாக அநாதையாகியுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், அந்த கட்சியின் தலைவர்களுடன் நடைபெற்ற சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இதனால், தனக்கு தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்க வேண்டியது கடமை எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

முஜிபுர் ரஹ்மானை தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்கு நியமிக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான மயந்த திஸநாயக்கவை பதவி விலகுமாறு ஏற்கனவே கோரப்பட்டுள்ள போதிலும் அவர் பதவி விலக மறுத்துள்ளார்.

இந்த நிலையில், முஜிபுர் ரஹ்மான் அரசியல் ரீதியான முடிவு ஒன்றை எடுக்க தயாராகி வருவதாக அரசியல் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# கணேமுல்ல சஞ்ஜீவ தப்பிச்செல்ல அரசியல்வாதிகளே உதவினராம்!

கொழும்பு, செப். 16

அரசியல் உதவியுடன் தான் நாட்டில் இருந்து தப்பிச் சென்றதாக சர்வதேச போதைப் பொருள் கடத்தல்காரரும் பாதாள உலகக்குழுத் தலைவருமன கணேமுல்ல சஞ்ஜீவ தெரிவித்துள்ளார்.

போலிக் கடவுச்சீட்டை பயன்படுத்தி கடந்த 13 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக இலங்கைக்கு வந்தபோது அவர் கைது செய்யப்பட்ட பின்னர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்குள் ஏற்பட்ட சிக்கலான நிலைமை காரணமாக அரசியல் உதவியுடன் வெளிநாடு சென்றதாகவும் இந்தியா மற்றும் நேபாளத்தில் தங்கி இருக்கமுடியாத காரணத்தால், போலி கடவுச்சீட்டை தயாரித்து இலங்கை திரும்பியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பின்னர், வெளிநாடுகளில் இருக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக சஞ்ஜீவ, விசாரணை அதிகாரிகளிடம் கூறியுள்ளார்.

வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல உதவிய அரசியல்வாதிகள் குறித்தும் சஞ்ஜீவ, அதிகாரிகளிடம் தகவல்கள் வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. (அ)

# ரொம் ஜேசி மாம்பழ உற்பத்தி பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், செப். 16

ஏற்றுமதிக்கான ரொம் ஜேசி மாம்பழ உற்பத்திக்குரிய சிறந்த பயிர் செய்கை முறைகள் தொடர்பான பயிற்சி நெறி இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகிறது.

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண விவசாய திணைக்கள இயக்குநர் திருமதி செ. சுகந்தினி கலந்து கொள்ளவுள்ளார்.

ரொம் ஜேசி மாமர செய்கையின் பயிராக்கவியல் நடவடிக்கைகள் என். எம். நிஸ்வான், மாம்பழ உற்பத்தியில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம், ரெம் ஜேசி மாம்பழ உற்பத்தியில் ஒருங்கிணைந்த நோய் முகாமைத்துவம் குறித்து சிறீ. ராஜேஸ் கண்ணா, ரொம் ஜேசி மாம்பழங்களை ஏற்றுமதி செய்வதற்கான அறுவடை மற்றும் அறுவடைக்கு பிந்திய நடைமுறைகள் நா. சிவபரன் விளக்கங்களை வழங்குவர். தொடர்ந்து களப்பயணம் இடம்பெறும்.

## அமெரிக்காவுக்கு செல்கிறார் அநுர

கொழும்பு, செப். 16

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க அமெரிக்காவுக்கு செல்லத் திட்டமிட்டுள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் 28 ஆம் திகதி முதல் நவம்பர் 5 ஆம் திகதி வரை அவர் அமெரிக்காவில் உள்ள சில பிரதான நகரங்களில் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார்.

லொஸ் ஏஞ்சல்ஸ், பொஸ்டன், ஹூஸ்டன், நியூயோர்க், வொஷிங்டன், வேர்ஜினியா ஆகிய நகரங்களில் தேசிய மக்கள் சக்தியின் கிளை அமைப்புகள் ஏற்பாடு செய்துள்ள கூட்டங்களில் அவர் உரை நிகழ்த்த உள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்க இதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவுக்கு சென்று அங்கு சில நகரங்களில் நடைபெற்ற கூட்டங்களில் உரையாற்றியிருந்தார். (அ)

## பாதுக்கவில் 2 பஸ்கள் மோதி விபத்து; 21 மாணவர்கள் மருத்துவமனையில்!

கொழும்பு, செப். 16

பாதுக்க - துன்னான பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 21 பாடசாலை மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நாராம்மல பகுதியிலிருந்து பாடசாலை மாணவர்களுடன் ஹோமாகம நோக்கி பயணித்த பஸ் ஒன்றுடன் பின்னால் வருகை தந்த பஸஸுடன் மோதுண்டமையால் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் பாடசாலை மாணவர்கள் 21 பேரும் ஆசிரியை ஒருவரும் காயமடைந்த நிலையில் பாதுக்க மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ)

# காலியாகும் பெரமுனவின் தொழிற்சங்கக் கூடாரம்!

கொழும்பு, செப். 16

பொதுஜன பெரமுனவின் தொழிற்சங்கத் தலைவர்களில் பலர் தற்போது பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா உள்ளிட்டோர் தலைமையிலான புதிய அரசியல் கூட்டணியில் இணைய ஆரம்பித்துள்ளதாக அந்த கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவில் சுமார் 100 தொழிற்சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. இவற்றில் சுமார் 25 தொழிற்சங்கங்களின் தலைவர்கள் புதிய அரசியல் கூட்டணியின் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் நிமல் லான்சா ஆகியோரை சந்தித்து அந்த கூட்டணியில் இணைந்துள்ளனர்.

பொதுஜன பெரமுன மீண்டும் எழுச்சி பெறுவதால் சர்வதேசமும் அச்சமடைந்துள்ளது. சாகர காரியவசம்

பொதுஜன பெரமுனவின் முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அசங்க சிறி, "நான் அண்மையில் புதிய அரசியல் கூட்டணியில் இணைந்து கொண்டார்.

அவர் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் ஜனாதிபதியின் ஒருங்கிணைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்", என்று தெரிய வருகிறது. (அ)

ஈழநாடு
Eelanadu
16.09.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 30

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மீண்டுமொரு குழு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் குழுவொன்றை நியமித்திருக்கின்றார். இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதாகக் கூறி - காலத்துக்குக் காலம் இது போன்ற குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குழுக்களும் சில பரிந்துரைகளை வழங்கியிருக்கின்றன என்று கூறப்படுகின்றது. ஆனால், அதனடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைத்ததா - என்று கேட்டால் பதில் இல்லை.

இந்தப் பின்னணியில் எல்லை தாண்டிய இஸ்லாமிய பயங்கரவாத தாக்குதல் ஒன்றின் மூலம் கொல்லப்பட்ட மக்களுக்கு நீதியை பெறுவது தொடர்பில் இப்போது அனைவரும் பேசுகின்றனர். இந்த சம்பவத்துடன் ராஜபக்ஷ தரப்புக்கு தொடர்பிருப்பதாக சனல் - 4 காணொலி வெளியானதைத் தொடர்ந்து எதிரணி அரசியல்வாதிகள் தொடர்ந்தும் இதுபற்றி கேள்வியெழுப்பி வருகின்றனர். இதற்கு அரசாங்கம் பதில் கூறவேண்டுமென்று கூறிவருகின்றனர். இந்த நிலையில் ஜனாதிபதியோ எதிர்கட்சிகளுக்கு பதிலளிக்கும் நோக்கில் விசாரணைக் குழு ஒன்றை நியமித்திருக்கின்றார். ஆனால், இந்தக் குழுவின் விசாரணையும் வழமை போல் வரலாற்றின் குப்பை தொட்டிக்குள் பாதுகாக்கப்படும் - என்பதுதான் உண்மை.

இலங்கையில் காலத்துக்குக் காலம் பல்வேறு அதிகார அத்துமீறல்கள் இடம்பெற்றிருக்கின்றன. தமிழ் மக்கள் திட்டமிட்டு இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களின் சொத்துகள் சூறையாடப்பட்டிருக்கின்றன. இதேபோன்று அவ்வப்போது முஸ்லிம்களுக்கு எதிராகவும் சில வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால், இதுவரையில் இந்த வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் எவருமே சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவில்லை. பதிலாக, குற்றவாளிகளுக்கு அரசியல் பாதுகாப்பே வழங்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறப்படும் காலத்தின் வயதும் இலங்கை இனப்பிரச்னையின் வரலாற்றின் வயதும் ஒன்றுதான். இந்த முக்கால் நூற்றாண்டு காலத்தில் எத்தனை விசாரணை குழுக்களை நாடு கண்டிருக்கின்றது. அந்தக் குழுக்களின் பரிந்துரைகள் கருத்தில் கொள்ளப்பட்டு, அரசியல் ரீதியில் அதற்கான ஆதரவை வழங்கியிருந்தால் இலங்கைத் தீவின் வரலாறு வேறுவிதமாக இருந்திருக்கும். ஆனால், நடந்ததோ வேறு. காலத்தை இழுத்தடிப்பதற்கும் குற்றங்களை மறைப்பதற்குமே விசாரணைக் குழுக்கள் பயன்பட்டிருக்கின்றன. ஓர் அரசாங்கம் நியமிக்கும் விசாரணைக் குழுவின் அறிக்கையை அடுத்து வரும் அரசாங்கம் ஏற்றுக்கொள்வதில்லை. அது திட்டமிட்டு அரசியல் பழிவாங்கலுக்காகவே மேற்கொள்ளப்பட்டதாகக்கூறி சாதாரணமாக அதனை குப்பை தொட்டிக்கு அனுப்பிவிடுவர்.

இந்த வரலாற்று பின்புலத்தில் நோக்கினால் குப்பைத் தொட்டிக்கு பயன்படுவதற்கான சில கடதாசிகளை தயார் செய்வதற்காக இன்னொரு குழு நியமிக்கப்பட்டிருக்கின்றதா - இப்படியொரு கேள்வியை கேட்குமாறே இலங்கையின் வரலாறு நம்மை நிர்பந்திக்கின்றது. பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு பதிலாக பிரச்னைகள் இல்லையென்று கூறுவதிலும் அதற்கான சான்றுகளை காண்பிப்பதற்காக பணியாற்றுவதிலுமே இலங்கையின் ஆட்சியாளர்கள் தங்களின் காலத்தையும் ஆற்றலையும் செலவிட்டு வருகின்றனர். இதுதான் இந்தத் தீவின் பிரச்னை.

# காணிகள் விடுவிக்கப்பட்டபோதும் குடியேறுவதற்கு அரசு உதவவில்லை

## வலி. வடக்கு மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 16

பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் குறிப்பிட்டளவு காணிகள் விடுவிக்கப்பட்டபோதும் அந்தக் காணிகளில் மக்கள் குடியேறும் வகையில் வீடுகளை அமைக்க அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கவில்லை என்று வலிகாமம் வடக்கு பலாலி மக்கள் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வலி. வடக்கு பலாலி கிராம மக்கள் தமது சொந்த நிலங்களில் இருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து பல்வேறு இடைத்தங்கல் முகாம் மற்றும் உறவினர்கள் வீடுகளில் பல துன்பங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர்.

இந்நிலையில், தமது காணிகளை விடுவிக்குமாறு அவர்கள் பல்வேறு போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையில், அண்மையில் பலாலி வடக்கு (ஜே/ 254) கிராம அலுவலர் பிரிவில் மேய்ச்சல் தரைக்கென ஒதுக்கப்பட்ட அரச காணியில் அவர்களுக்கு என காணி அளவீடு செய்யப்பட்டு, மக்களை மீள் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும், அந்த மக்களின் சொந்த பூர்வீக காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை என அந்த மக்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளதோடு அந்தக் காணிகள் படையினர் வசம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

5 முகாம்களில் சேர்ந்த 49 குடும்பங்கள் வாழ்ந்து வந்த நிலையில் 45 குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய 4 குடும்பங்களுக்கு காணி வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

45 குடும்பங்களுக்கும் 13 அரை ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இந்துக் கோவிலுக்கு 10 பரப்பு காணியும், பாடசாலைக்கு என 2 ஏக்கர் காணியும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு குடும்பத்துக்கு தலா 2 பரப்பு காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

மெசிடோ நிறுவனத்தின் உதவியுடனும் ஒத்துழைப்போடும் தாங்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்த போராட்டங்களின் பலனாகவே தமக்கு இந்தக் காணி கிடைத்ததாக மக்கள் தெரிவித்தனர்.

எனினும், தமது பூர்வீக காணிகளையே மீட்டெடுப்பதே தமது இலக்காக உள்ளதாக அந்த மக்கள் குறிப்பிட்டனர். (ஐ)

# பஸ்ஸிலிருந்து இறங்கியவர் வீழ்ந்து திடீர் மரணம்!

யாழ்ப்பாணம், செப். 16

பணியிடத்துக்கு பேருந்தில் சென்றவர் இறங்கும் போது மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், நாவற்குழி பகுதியில் நேற்று காலை இந்த சம்பவம் நடந்தது.

நாவற்குழியில் உள்ள பனை, தென்னை அபிவிருத்தி சபையில் பணி புரிபவரே இவ்வாறு உயிரிழந்தார். அவர் பேருந்தில் வந்து பணிமனைக்கு முன்பாக இறங்கிய போது திடீரென மயக்கமடைந்து நிலத்தில் விழுந்தார்.

பின்னர் அவரை பரிசோதித்தபோது உயிரிழந்தமை தெரிய வந்தது. மட்டுவில், சந்திரபுரத்தை சேர்ந்த மாணிக்கவாசகர் சந்திரகுமார் (வயது 49) என்பவரே உயிரிழந்தார். (ஐ)

# பொலிஸ் நிலையங்கள் மீதான கண்காணிப்பு மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, செப். 16

நாடளாவிய ரீதியில் பொலிஸ் நிலையங்களை கண்காணிக்கும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என அதன் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதனால், பொலிஸாருக்கு எதிரான மனித உரிமைகள் மீறல் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கண்காணிப்பின் போது சந்தேகநபர்களை கைது செய்யும் வழிமுறைகள் மற்றும் கைதிகள் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுகின்றமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார். (ஐ)

# இலங்கை வந்தார் நடிகர் பிரபுதேவா



கொழும்பு, செப். 16

பிரபல தென்னிந்திய திரையுலக கலைஞர் பிரபுதேவா தனது அடுத்த படத்துக்கான பாடல் பதிவு செய்வதற்காக இலங்கை வந்துள்ளார்.

நடனம், இயக்கம், நடிப்பு என இந்திய சினிமாவில் பல மொழிகளில் பிரபுதேவா பிரபலம் பெற்றவர்.

இந்தியாவின் சென்னையில் இருந்து சிறீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் பிரபுதேவா இலங்கை வந்துள்ளார்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செப்ரெம்பர் - 16 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - ஆவணி 30
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : துவிதியை




**மேடம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில புதுமைகளைச் செய்து கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**இடபம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்க தொடங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
அரசு காரியங்கள் சாதகமாக முடியும். சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சில சூழ்ச்சிகளை கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
சொத்து பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். அதிகாரி ஆலோசனையை தருவீர்கள். வெற்றியைத் தரும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் இதுவரை வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தம் கையெழுத்தாகும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். சிலர் உங்களை குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**துலாம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வந்து நீங்கும். மேலதிகாரியிடம் மோதல்கள் வேண்டாம்.

**விருட்சிகம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். புது பொறுப்புகள் ஏற்பீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**தனுசு**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். சாதிக்கும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் குறைந்து மனதில் மகிழ்ச்சியாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகபடுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் பெரிய இழப்புகள் ஏற்பட கூடும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**மீனம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

# “காவிரியில் தண்ணீர் கேட்பது பிச்சையல்ல நமது உரிமை!”

வேலூர், செப். 16

“காவிரியில் தமிழகத்துக்கு தண்ணீர் கேட்பது யாசகம் இல்லை. அது நம்முடைய உரிமை. உச்ச நீதிமன்றத்தால் அறுதியிட்டு சொல்லப்பட்ட உரிமை. ‘கர்நாடகத்தில் மழை பெய்து ஏராளமாக தண்ணீர் வந்தால் மட்டும்தான் தமிழகத்துக்கு தண்ணீர் கொடுக்க முடியும். குறைவாக தண்ணீர் இருந்தால் தண்ணீர் கொடுக்க முடியாது’ என்று கர்நாடகா சொல்ல முடியாது” என்று தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

வேலூரில் நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்று அவர் உரையாற்றுகையில், “காவிரியில் நாம் தண்ணீர் கேட்பது யாசகம் இல்லை. அது நம்முடைய உரிமை. உச்ச நீதிமன்றத்தால் அறுதியிட்டு சொல்லப்பட்ட உரிமை. கர்நாடகம் தங்களிடத்தில் தற்போது தண்ணீர் இல்லை என்கிறார்கள். அதற்காக மழை பெய்து ஏராளமாக தண்ணீர் வந்தால் மட்டும்தான், தமிழகத்துக்கு தண்ணீர் கொடுக்க முடியும், குறைவாக தண்ணீர் இருந்தால், தண்ணீர் கொடுக்க முடியாது என்று சொல்ல முடியாது.

கையளவு தண்ணீர் இருந்தாலும், அதை எங்களுக்கு பங்கிட்டுத் தர வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஆனால், கர்நாடகம் ஆங்காங்கே அணைகளிலே தண்ணீரை நிறுத்தி வைத்துக் கொண்டு கே. ஆர். எஸ், கபினி அணையிலும் அதேபோல மற்ற அணைகளிலும் நிறுத்தி வைத்துள்ளனர். எனவே, கர்நாடகவில் இருக்கும் தண்ணீரில், எங்களுக்கு உரிய தண்ணீரை தர வேண்டும் என்று தமிழகம் கர்நாடகாவிடம் கேட்கவில்லை. தமிழகம் கேட்டது, உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி ஒழுங்காற்றுக் குழுவிடம் கேட்டோம். அவர்கள் உடனடியாக கண்ணை மூடிக்கொண்டு 15 நாட்களுக்கு 5,000 கன அடி தண்ணீர் திறந்துவிடுங்கள் என்று கூற மாட்டார்கள்.

காரணம், அவர்கள் இரண்டு மாநிலங்களுக்கும் பொதுவானவர்கள். கர்நாடக அணைகளில் உள்ள தண்ணீரின் இருப்பை கணக்கிட்டு, 15 நாட்களுக்கு விநாடிக்கு 5,000 கனஅடி தண்ணீரை தரலாம் என்று முடிவு செய்து அறிவித்துள்ளார்கள். அதையும் விடமாட்டோம் என்று கர்நாடக அரசு கூறுகிறது. இது உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஒரு சட்ட ஆணையத்தை மீறுவதாகும். இந்தப் போக்கு சரியானது அல்ல.

அதற்காக அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுகின்றனர். அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவதால், ஒன்றும் பெரிய பிரச்னை இல்லை. நாமும் கூட்டலாம். அதில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால், 21ஆம் திகதி இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. அந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கு கட்டுப்பட வேண்டும்.

காவிரி வழக்கில், உச்ச நீதிமன்றத்தில் நமக்கு சாதகமாக இல்லை என்றால், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அடுத்த என்ன செய்வது என்பது குறித்து யோசிக்கலாம். எனவே, இந்த விவகாரத்தில், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை தமிழக அரசு எதிர்பார்க்கிறது” என்று அவர் கூறினார்.

# அமைச்சர் உதயநிதி மீதான வழக்கை உடன் விசாரிக்க நீதிமன்று மறுப்பு

புதுடில்லி, செப். 16

சனாதனத்துக்கு எதிராக பேசிய அமைச்சர் உதயநிதி மீது நடவடிக்கை எடுக்கக் கோரிய வழக்கை அவசர வழக்காக விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

சென்னையில் நடந்த நிகழ்வு ஒன்றில், ‘சனாதன எதிர்ப்பு மாநாடு’ என்று போடாமல் ‘சனாதன ஒழிப்பு மாநாடு’ என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள். சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும். எதிர்க்க முடியாது. கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக்கட்ட வேண்டும்.

அப்படித்தான் இந்த சனாதனம். சனாதனம் என்பதை எதிர்ப்பதைவிட ஒழிப்பதே நாம் செய்ய வேண்டியதே முதல் காரணம். எனவே, இந்த மாநாட்டுக்கு மிகப் பொருத்தமான தலைப்பு வைத்திருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய பாராட்டுகள் என தெரிவித்திருந்தார். இது தேசிய அளவில் விவாதப் பொருளாகி பல்வேறு விமர்சனங்கள் எழுந்தது. மேலும், பா. ஜ. க. மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில், உதயநிதி ஸ்டாலினுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தியாவில் வாழும் கோடிக்கணக்கான இந்து மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் பேசியுள்ளனர். எனவே, உதயநிதி உள்ளிட்டோர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில், பல்வேறு வலதுசாரி அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் பொதுநல மனு உள்ளிட்ட வழக்குகளை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகளை அவசர வழக்குகளாக உடனடியாக எடுத்து விசாரிக்க கோரி நேற்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு முன்பு முன்னிலையான வழக்கறிஞர்கள் சிலர் கோரிக்கை வைத்தனர். ஆனால், இதுபோன்ற முறையீடுகள் செய்வதற்கான நேரம் முடிந்த பின்னர், வழக்கறிஞர்கள் அவசர வழக்காக விசாரிக்க கோரி முறையீடு செய்தனர்.

இதனால், கோபமடைந்த தலைமை நீதிபதி, நீதிமன்ற நடைமுறைகளை முறையாக பின்பற்றி, முறையிட வேண்டும் என்று வழக்கறிஞர்களுக்கு அறிவுறுத்தினார். எனவே, வரும் திங்கட்கிழமை மீண்டும் முறையீடு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# மகளிருக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு நேற்று ஆரம்பம்!

சென்னை, செப். 16

குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ. 1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் குடும்பத்தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என கடந்த சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது அக்கட்சி சார்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் செப்ரெம்பர் 15 அறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான தகுதி வாய்ந்த பயனாளிகளை கண்டறிய விண்ணப்பங்கள் பெறப்பட்டன. சுமார் 1.70 கோடி விண்ணப்பங்கள் வரை பெறப்பட்ட நிலையில் ஒரு கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் குடும்பத் தலைவிகள் தகுதியானவர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரு நாட்களாக தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் வங்கிக்கணக்குக்கு ஒரு ரூபாய் அனுப்பி வங்கி கணக்குகளை சரிபார்க்கும் பணிகள் நடைபெற்றன. இதனைத்தொடர்ந்து நேற்று பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு ரூ.1,000 அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், காஞ்சிபுரத்தில் உள்ள பச்சையப்பன் ஆண்கள் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற விழாவில், குடும்பத்தலைவிகளுக்கு மாதம் தலா ரூ.1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் முறைப்படி தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தை பிற மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர். (ஐ)

# இரண்டாம் கட்ட கடன் வசதியை பெறுவதில் எந்த சிக்கலுமில்லை!

## கூறுகிறார் ஷெஹான் சேமசிங்க

கொழும்பு, செப். 16

**சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் வசதியை பெற்றுக்கொள்வதற்கு எவ்வித சிக்கல்களும் ஏற்படாது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.**



சர்வதேச நாணய நிதியத்துடனான முதலாவது மீளாய்வு கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட இந்த கடன் திட்டத்திலிருந்து இடையில் விலகுவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இல்லை எனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாங்கள் ஆரம்பித்த மீளாய்வு கலந்துரையாடல் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு இடம்பெறும்.

இந்த கலந்துரையாடல் நிறைவடைந்ததன் பின்னர் நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் உதவியை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

கடன் மறுசீரமைப்பு மற்றும் வெளிநாட்டு நிதிச் சந்தையில் பிரவேசிப்பதற்கான சக்தியை தான் சர்வதேச நாணய நிதியம் இதனூடாக நமக்கு பெற்றுத் தருகின்றது.

அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் எங்கள் கடமைகளை நிறைவேற்றி இருக்கின்றோம்.

சில விடயங்களில் நீதிமன்ற செயற்பாடுகள் இடம்பெற்றமையால் சில சட்டமூலங்களை நிறைவேற்ற சிறிது தாமதம் ஏற்பட்டது.

இரண்டாம் கட்ட கடன் உதவியை பெற்றுக்கொள்ளவும் அதனூடாக முன்னோக்கி செல்லவும் எமக்கு எந்த பிரச்னைகளும் ஏற்படாது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட இந்த கடன் திட்டத்திலிருந்து இடையில் விலகுவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இல்லை.

2024 ஆம் ஆண்டில் இருந்து பொருளாதார வளர்ச்சியை நோக்கி பயணிக்க எதிர்பார்க்கின்றோம்-என்றார். (அ)

# கோழி இறைச்சி, முட்டை விலை எதிர்காலத்தில் குறைவடையும்!

## அமைச்சர் மஹிந்த அமரவீர

கொழும்பு, செப். 16

எதிர்காலத்தில் கோழி இறைச்சி மற்றும் முட்டை விலை குறையும் என்றும் முட்டையை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படாது என்றும் கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுமார் 34 இலட்சத்து 20 ஆயிரம் புதிய கோழிக் குஞ்சுகள் தற்போது கோழிப் பண்ணைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், பெரும்பாலும், அந்தக் கோழிகள் டிசம்பர் மாதத்திற்குள் முட்டையிடும் பருவத்திற்கு வளர்ந்துவிடும்.

எனவே எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்குப் பின்னர், இந்த நாட்டில் முட்டை உற்பத்தி மேலும் அதிகரிக்கும் என தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கோழிப் பண்ணைகளுக்குத் தேவையான தீவன உற்பத்திக்காக சோளத்தை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பை இந்தத் தொழில்துறையினருக்கு வழங்கியுள்ளோம். எதிர்காலத்தில் எமது மக்கள் இதன் மூலம் பயனடைவார்கள்.

பால் உற்பத்தியில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்வதற்காக குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதன் கீழ், 2023 முதல் 2028 வரையிலான ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று தேசிய பால் உற்பத்திக் கொள்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாடளாவிய ரீதியில் இயங்கும் அரச கால்நடைப் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதுடன், இந்தத் தொழில் துறையின் அபிவிருத்திக்கு அதிக பங்களிப்புகளை வழங்கும் தனியார் கால்நடைப் பண்ணைகளை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது-என்றார். (அ)

# 97 வயதில் பௌத்த கற்கைநெறியில் முதுமாணி பட்டம் பெற்ற மூதாட்டி!



கொழும்பு, செப். 16

97 வயதான விதானகே லீலாவதி அஸ்லின் தர்மரத்ன, களனிப் பல்கலைக்கழகத்தின் பாலி பௌத்த கற்கைகள் முதுகலைப் பட்ட நிறுவனத்தினால் இவ்வருடம் நடாத்தப்பட்ட பௌத்த கற்கையில் முதுமாணிப் பட்டத்தை பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

இந்தப் பல்கலைக்கழகத்தின் மூத்த மாணவியும் அவர்தான்.

7 பாடங்களைக் கொண்ட இந்த முதுகலைப் பட்டத்திற்கு, பாலி நிகாயா கதா பௌத்த சிந்தனை - பகுப்பாய்வு மற்றும் வர்ணனை, புத்த கலை மற்றும் கட்டிடக்கலை 11 (இலங்கை) பௌத்த உளவியல், புத்த பொருளாதார தத்துவம், தேரவாத பாரம்பரியம் - வரலாறு மற்றும் தர்ம விஷயங்கள், பௌத்த நெறிமுறைகள் - கருத்துக்கள் மற்றும் தத்துவ விளக்கம், ஆராய்ச்சி முறை மற்றும் விரிவாக்கம் ஆகியவை பாடங்களில் தோற்றியுள்ளார்.

அஸ்லின் தர்மரத்ன தனது 94ஆவது வயதில் வித்தியோதயா பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட திரிபிடக தர்மம் மற்றும் பாலி மொழி பரீட்சையில் சித்தியடைந்தார்.

இவர் 6 பெண் குழந்தைகளின் தாயாராவார்.

1952 இல் இலங்கையிலில் நொத்தாரிசாக சித்தியடைந்த முதல் பெண்மணியும் இவரே ஆவார். (அ)

# '13' விவகாரத்தில் பாராளுமன்றம் அனுமதிக்கும் விடயத்தை மட்டுமே ஜனாதிபதி செயல்படுத்துவார்

## நீதி அமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 16

"அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள ஒத்திசைவு பட்டியலை நீக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இன்னும் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை. 13ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தில் பாராளுமன்றம் அனுமதிக்கும் விடயத்தை மட்டுமே ஜனாதிபதி செயற்படுத்துவார்." - என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு, கிழக்கில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

காணாமல்போனோர் அலுவலகம், இழப்பீட்டு பணியகம், நல்லிணக்க அலுவலகம் என எனது அமைச்சின்கீழ் மூன்று நிறுவனங்கள் உள்ளன. இதன் மூலம் நடமாடும் சேவை என



பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வடக்கில் மக்கள் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

டக்ளஸ் தேவானந்தா போன்ற அரசியல்வாதிகள் அடிப்படைவாத நிலைப்பாட்டில் இல்லை. ஒரு சில எம்.பிக்களே 13 ஐ முழுமையாக அமுலாக்குமாறு கோரினர்." இது சம்பந்தமான யோசனைகளை முன்வைக்கவும், அமுலாக்குவதா இல்லையா என்பது குறித்து என்னால் தீர்மானம் எடுக்க முடியாது, பாராளுமன்றத்தில் முன்வைத்து, அனைத்து கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்களை செயற்படுத்துகின்றேன்" என ஜனாதிபதி இதற்கு பதிலளித்துள்ளார். இது பாராளுமன்றத்துக்கு உரிய பணி, அனைத்து கட்சிகளும் இணக்கத்துக்குவரும் விடயத்தை எம்மால் செய்ய முடியும்.

இந்த 13 ஆவது திருத்தச்சட்டம் அரசியலுக்காகவும் பயன்படுத்தப்பட்டுவருகின்றது, அதற்காக போராடுகின்றோம் என வடக்கு அரசியல்வாதிகளால் அம்மக்கள் மத்தியில் கருத்து உருவாக்கப்படலாம். இந்தியாவிலும் தேர்தல் நடைபெறவுள்ளது, ஆட்சி அமைக்க தமிழக வாக்குகளும் அவசியம் என்பது பிரதமர் மோடிக்கு தெரியும். அதனால் அண்மையில் கச்சதீவை பற்றியும் அவர் கதைத்திருந்தார். இது பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒத்திசைவு பட்டியல் மற்றும் 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள அதிகாரங்களை குறைக்கும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ள சில சட்டங்களையும் நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக நாம் தீர்மானம் எடுக்கவில்லை. நாடாளுமன்றத்தில் கலந்துரையாடியே முடிவெடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# இரண்டு வாரங்களில் மட்டும் 46,000 சுற்றுலா பயணிகள்!

கொழும்பு, செப். 16

செப்ரெம்பர் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் 46,000 இற்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் 12ஆம் திகதி வரையில் மொத்தமாக 46 ஆயிரத்து 308 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாக அதிகார சபையின் தரவுகள் காட்டுகின்றன.

இதற்கமைய, இந்த வருடத்தில் இதுவரையில் நாட்டை வந்தடைந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 9 இலட்சத்து 50 ஆயிரத்து 626 ஆக அதிகரித்துள்ளது.

இந்த மாதத்தில் சுமார் 1 இலட்சத்து 20 ஆயிரத்து 201 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் நோக்கி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த இலக்கில் இதுவரையில் 39 சதவீதத்தை இலங்கை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# நாற்பது கப்பல்களில் நிலக்கரி கொள்வனவு

கொழும்பு, செப். 16

2023 முதல் 2024 ஆம் ஆண்டுக்கான நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் பணிகளுக்காக 40 கப்பல்களில் நிலக்கரி கொள்வனவு செய்யப்படவுள்ளன.

அதில் நாட்டை வந்தடைந்த முதலாவது கப்பலில் இருந்து நிலக்கரியை தரையிறக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக இலங்கை வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் மாத்திரம் 4 கப்பல்களில் நிலக்கரியினை இறக்குமதி செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அடுத்த ஆண்டு மே மாதத்திற்குள் எஞ்சியுள்ள நிலக்கரி கப்பல்களை இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# முன்னிலை சோசலிச கட்சியை வேட்டையாடுவதற்கு சூழ்ச்சி!

## குமார் குணரத்னம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 16

**"ஆயுதப்போராட்டத்துக்கு தயாராகின்றனர் எனக்கூறி முன்னிலை சோசலிசக் கட்சியை வேட்டையாடுவதற்கான சூழ்ச்சி இடம்பெறுகின்றது." - என அக்கட்சியின் தலைவரான குமார் குணரத்னம் தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

அறகலய (மக்கள் போராட்டம்) காலத்தில் மக்கள் சக்தி பற்றி அதிகம் பேசப்பட்டது. பாராளுமன்றம் உட்பட மக்கள் பிரதிநிதித்துவ சபைகளுக்கு வெளியில் கட்டியெழுப்பப்பட வேண்டிய மக்கள் சக்தி குறித்து கருத்தாடல் உருவானது. ஏனெனில் கடந்த 75 வருடகாலமாக மக்கள் பிரச்னை, சமூகப்பிரச்னை தீர்க்கப்படவில்லை. அனைத்து இன மக்களும் நல்லிணக்கத்துடன் வாழும் வேலைத்திட்டம் உருவாக்கப்படவில்லை. மாறாக பொருளாதார பிரச்னை தலைதூக்கியது. இனப் பிரச்னை மேலோங்கியது, அரச வளங்கள் விற்கப்பட்டன.

தேர்தல் ஊடாக ஆட்சிகள் மாறின. ஆட்சிக்குவந்த அரசுகளால் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. அதனால்தான் பாராளுமன்றத்துக்கு வெளியில் மக்கள் சக்தியொன்று அவசியம் என முன்னிலை சோசலிசக் கட்சி வலியுறுத்தியது.

எனினும், எம்மை வேட்டையாடும் நோக்கில் இக்கூற்றை திரிவுபடுத்தி சூழ்ச்சியான முறையில் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. அதாவது பாராளுமன்றத்தை, தேர்தலை புறக்கணிக்கும் இவர்கள், தேர்தலைவிட அறகலவை நம்புவது, ஆயுதப் போராட்டத்துக்காகவே என பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.முன்னிலை சோசலிசக் கட்சியை வேட்டையாடும் நோக்கிலேயே இப்படியான சூழ்ச்சி திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. உண்மை அதுவல்ல, நாம் தேர்தல்களை எதிர்கொள்வோம். மக்கள் சக்தி ஊடாக பலத்தை கட்டியெழுப்புவது பற்றி பேசுகின்றோம்-என்றார். (அ)

# ஊட்டச்சத்து குறைபாடு; 15,763 சிறுவர்கள் பாதிப்பு

கொழும்பு, செப். 16

நாட்டில் 15 ஆயிரத்து 763 சிறுவர்கள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய மட்டத்திலான போசாக்கு நிலை குறித்த தரவுகளைப் பெறுவதற்காக கடந்த ஜூன் மாத நிறைவில் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட போஷாக்கு கணக்கெடுப்பில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சின் குடும்பநல சுகாதார பணியகம் தெரிவித்துள்ளது.

ஜூன் முதலாம் திகதி வரை, 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளின் வளர்ச்சி நிலை இதன்போது, மதிப்பீடு செய்யப்பட்டது.

குடும்பநல சுகாதார சேவையில் 5 வயதுக்குட்பட்ட 14 இலட்சத்து 6 ஆயிரத்து 213 சிறுவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில், 13 இலட்சத்து 57 ஆயிரத்து 675 சிறுவர்கள் தொடர்பில் இந்த மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக குடும்பநல சுகாதார பணியகம் தெரிவித்துள்ளது.

குழந்தை ஆரோக்கியம் மற்றும் மேம்பாடு தொடர்பான வயதுக்கு ஏற்ற எடை அட்டவணையில், இளஞ்சிவப்பு அல்லது சிவப்பு நிறத்தில் குறிக்கப்படும் வயதுக்கு ஏற்ற எடை குறைவாக இருக்கும் சிறுவர்களின் சதவீதம் 17 ஆக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

புதுப்பிக்கப்பட்ட தரவுகளின்படி, நுவரெலியா மாவட்டத்திலிருந்து அதிக எடை குறைவான சிறுவர்கள் பதிவாகியுள்ளனர்.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், நகர்ப்புறம், கிராமம் மற்றும் தோட்டங்கள் உட்பட அனைத்துத் பகுதிகளிலும் எடை குறைவான சிறுவர்கள் அதிகரித்துள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் குடும்பநல சுகாதார பணியகம் குறிப்பிட்டுள்ளது.

**ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவம்**

# நகர்த்தல் பத்திர விசாரணைக்கு உயர்நீதிமன்று திகதியிட்டுள்ளது!

கொழும்பு, செப். 16

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில், தாக்கல் செய்யப்பட்டு தற்போது தீர்ப்பளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான நகர்த்தல் பத்திர விசாரணைக்கு உயர் நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் நவம்பர் மாதம் குறித்த நகர்த்தல் பத்திரம் மீதான விசாரணைகள் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர் புவனேக அலுவிஹாரே தலைமையிலான 6 பேர் அடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன ஆகியோர் குறித்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு, தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நட்டஈடு வழங்குமாறு கடந்த ஜனவரி 12ஆம் திகதி, ஏழு பேர் கொண்ட உயர் நீதிமன்ற நீதியர்கள் ஆயம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரதமர் தினேஷுடன் பஸில் ராஜபக்ஷ பேச்சு


கொழும்பு, செப். 16

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பொதுஜன பெரமுன மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இடையிலான கலந்துரையாடலாகவே இது இடம்பெற்றதுடன், பல மணித்தியாலங்கள் பிரதமரும் பஸில் ராஜபக்ஷவும் நாட்டின் நிலைமை குறித்து ஆலோசித்துள்ளனர்.

அடுத்த ஆண்டுகான வரவு - செலவுத் திட்டத்தில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் நலன் மற்றும் நிவாரணங்களுக்காக அதிகளவிலான ஒதுக்கீடுகளை மேற்கொள்வது தொடர்பில் இந்த சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம், பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும் அதிக நிவாரணங்களை வழங்க முன்மொழிந்துள்ளமை தொடர்பாகவும் இக்கலந்துரையாடலில் கருத்துகளை இருவரும் பரிமாறிக்கொண்டுள்ளனர்.



நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை, கூட்டணி அரசியலின் பங்களிப்புகள், பொது நல வசதிகள், ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைச் சுமை மற்றும் நிவாரணம், பொது நிறுவன முடிவுகளை எடுப்பதில் தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்களுடன் கலந்துரையாடல், நிறுவன மறுசீரமைப்பு பிரச்னைகள், ஊழியர் உரிமைகள், நலன் மற்றும் மானியம், சுகாதார சேவையில் உள்ள பிரச்னைகள், போதைப்பொருள் பிரச்சினை, தேர்தல் முறைமை உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

சமுர்த்தி மானியம் தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டும் என இரு தரப்பு பிரதிநிதிகளும் வலியுறுத்தினர்.

பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி, பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம், பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, காமினி லொகுகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எஸ்.எம்.சந்திரசேன, சஞ்சீவ எதிரிமான்ன, பிரதமரின் செயலாளர் சட்டத்தரணி திஸ்ஸ ஜயவர்தன யாப்பா, பிரதிச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன உட்பட பல முக்கியஸ்தர்களும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (அ)

# மாதம் ஒருமுறை வெளிநாடு செல்ல ஆசைப்படும் ரணில்!

## ஹர்சன ராஜகருண குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 16

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாதம் ஒரு முறை வெளிநாடு செல்லும் ஆசை இருப்பதாகவும் அது அவரது தனிப்பட்ட ஆசை எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருண தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாதத்தில் ஒரு முறை வெளிநாடு செல்லவேண்டும் என்ற பெரிய தேவை இருக்கின்றது.மக்கள் ஆணையுடன் அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறே முழு உலகமும் கூறி வருகிறது. மக்களால் விரட்டப்பட்ட



அரசாங்கம் எப்படியான உதவிகளை கேட்டாலும் சர்வதேச ஒத்துழைப்புகளை வழங்காது.

மக்கள் ஆணையில்லாத அரசாங்கம் ஒன்றுக்கு சர்வதேச நாடுகள் உதவாது.

சர்வதேசத்தின் உதவிகளை பெற்றுக்கொள்ள மக்கள் ஆணையுடன் கூடிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும்-என்றார். (அ)

# தங்கம் கடத்திய பெண் கைதானார்

கொழும்பு, செப். 16

சட்டவிரோதமாக 1 கிலோ 748 கிராம் நிறையுடைய தங்கத்தை நாட்டிற்கு கொண்டு வந்த ஒருவர் கட்டுநாயக்க பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

டுபாயிலிருந்து நாட்டுக்குள் பிரவேசித்த பெண் தொடர்பில், சந்தேகமடைந்த அதிகாரிகள் அவரை சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது, குறித்தப் பெண்ணிடம் இருந்து 1 கிலோ 748 கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பெண் இந்தியாவைச் சேர்ந்த 26 வயதுடையவர் என்பதுடன் மேலதிக விசாரணைக்காக அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்க திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# கறுப்பு ஜுலை கலவரத்தை நியாயப்படுத்தவே முடியாது

## கூறுகிறார் அநுரகுமார

கொழும்பு, செப். 16

“வடக்கு இளைஞர்களும், தெற்கு இளைஞர்களும் மண் உரிமைக்காக போரிட்டனர், இன்று போர் முடிந்துவிட்டது, ஆனால் நாம் அனைவரும் தோல்வி அடைந்தவர்களாக நிற்கின்றோம். ஏனெனில் எமது நாட்டு வளங்கள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அந் நாடுதான் உரிமையாளராக மாறியுள்ளது.”

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மாவட்ட அதிகார சபைக்கான தேர்தலின்போது, யாழ்ப்பாணத்தில் கட்டாயம் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக யாழ். நூலகத்தை எரித்து வாக்குப் பெட்டிகளை ஜே.ஆர். ஜயவர்தன நிரப்பிக்கொண்டார். காமினி ஜயவிக்கிரம பெரேரா என்ற பொலிஸ் அதிகாரியே இந்த செயலை வழிநடத்தியுள்ளார். அந்த இதயத்தைதான் ஆட்சியாளர்கள் வாக்குப்பெட்டி நிரப்புவதற்காக எரித்தனர்.

அதன் பின்னர் கறுப்பு ஜூலை அரங்கேற்றப்பட்டது. இலங்கை வரலாற்றில் இதுதான் கறுப்பு பக்கம். என்றுமே நியாயப்படுத்த முடியாத கொடூரம். இவ்வாறான அவலங்களால்தான் ஆயுத போராட்டம் உருவாகி, தற்கொலை போராளிகள்கூட உருவாகினர்.

30 வருட போரில் வடக்கிலும் உயிரிழப்புகள் இடம்பெற்றன, தெற்கிலும் உயிரிழப்பு இடம்பெற்றன. தெற்கிலும் போர் வீரர்கள் உள்ளனர், வடக்கில் உள்ள மக்கள் நினைப்பது போல் அவர்களுக்கும் போர் வீரர்கள் உள்ளனர்.

வடக்கில் உள்ள தாய் தமது பிள்ளையின் படத்தை வைத்துக் கொண்டு வீதியில் போராடுகின்றார், தெற்கில் உள்ள தாய்,



இராணுவ நினைவு தூபிக்கு முன்னால் நின்றுகொண்டு தனது மகனின் பெயரை தேடுகின்றார்.

போரால் வடக்குக்கும், தெற்குக்கும் எஞ்சியது என்ன? போர் முடிந்துவிட்டது, நாம் அனைவரும் தோல்வி அடைந்துவிட்டோம்.

மன்னாரை மீட்பதற்கு கடும் சமர் இடம்பெற்றது. அது தமது மண்ணென வடக்கு இளைஞர்கள் போரிட்டனர், அந்த பகுதியை தம்முடன் இணைத்துக் கொள்ள தெற்கு இளைஞர்கள் போரிட்டனர். ஆனால் இன்று மன்னாரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் அதானிக்கு வழங்கப்பட்டுள்ளது. 4 ஆயிரம் மெகா ஹோல்ட் காற்றாலை மின் உற்பத்தி இடம்பெறவுள்ளது.

பூநகரிக்காகவும் சண்டை இடம்பெற்றது. அந்த இடமும் காற்றாலை மின் உற்பத்திக்கு அதானிக்கு வழங்கப்படவுள்ளது.

திருகோணமலையில் பொருளாதார நிலையம் அமைப்பதற்காகவும் இந்தியாவுக்கு இடங்கள் வழங்கப்படவுள்ளன. இந்தியாதான் இன்று உரிமையாளராகிவிட்டது.

துன்பம், வேதனை, கசப்பான வரலாறு என்பனவே எமக்கு எஞ்சியுள்ளன.

வடக்கிலும் இனவாதம் உள்ளது, தெற்கிலும் உள்ளது, அவற்றுக்கு அப்பால் நாம் அனைவரும்இலங்கையர்களாக இணைந்து, இன ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டு புதிய சுதந்திர போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்.- என்றார். (அ)



# பிரிட்டன் தூதுவர் சஜித்துடன் சந்திப்பு

கொழும்பு, செப். 16

புதிய பிரித்தானிய தூதுவர் அன்ட்ரூ பெட்ரிக் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான புதிய பிரித்தானிய தூதுவராகப் பதவியேற்றதன் பின்னர் இடம்பெற்ற இந்த விசேட சந்திப்பில், நாட்டில் நிலவும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் இரு தரப்பும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டன.

அங்கு, தற்போதைய அரசாங்கம் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தாமல், தேர்தலை தொடர்ச்சியாக ஒத்திவைப்பதன் மூலம் குடிமக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் தற்போதைய அரசாங்கம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ புதிய பிரித்தானிய தூதுவரிடம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரித்தானிய தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் டேனியல் ஷெரியும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# படையினரை வேட்டையாடும் முயற்சியே சனல் 4 காணொலி

## தேசிய சுதந்திர முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 16

இஸ்லாமிய அடிப்படைவாத திட்டங்களை மறைத்து, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பொறுப்பை இராணுவத்தின் மீது சுமத்தி, அவர்களை வேட்டையாடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி மூலம் ஒளிப்பரப்பட்ட ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஆவணப்படத்தின் இறுதி நோக்கம் என்ன என்பது தற்போது நன்றாக தெளிவாகியுள்ளது.

பொறுப்புக்கூறவேண்டிய புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளை கைது செய்யவேண்டும் என ஒரு புறம் சம்பந்தன் கூறுகிறார். அதேபோல் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கூறுகிறார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதி ஆணையாளரும் அதனையே கூறுகிறார்.

2015 ஆம் ஆண்டு பாதுகாப்பு படையினருக்கு எதிராக போர் குற்றங்களை சுமத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்ட 30/1 யோசனையின் பின்னரும் இதே விதமாக இலங்கை படையினருக்கு எதிராக சர்வ



தேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.

சனல் 4 என்ற தொலைக்காட்சி என்பது பணம் செலுத்தினால், இலஞ்சம் வழங்கினால் சத்திட்டங்கள் சம்பந்தமான காணொளிகளை ஒளிப்பரப்பும் தொலைக்காட்சி.

இதற்கு முன்னர் புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதியில் தயாரிக்கப்பட்ட காணொளி மூலம் இலங்கையின் பாதுகாப்புப் படையினருக்கு எதிராக குற்றம் சுமத்தினர்.

தற்போது வெளியிட்டுள்ள காணொளி மூலம் ஈஸ்டர் தாக்குதலுக்கான பொறுப்பை புலனாய்வுப் பிரிவினர் மீது சுமத்தியுள்ளனர்.

இதில் பிரதான கதாநாயகன் பாத்திரத்தில் நடித்த ஆசாத் மௌலானா அரசியல் தஞ்சத்தை எதிர்பார்த்துள்ள நபர் என்பது மிகவும் தெளிவானது. தற்போது அவர் பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோர முடியும்.

இந்த காணொளி மூலம் நன்மை பெறும் மூன்று தரப்பினரை அடையாளம் காண முடியும். ஒரு தரப்பு இஸ்லாமிய அடிப்படைவாத தரப்பு.

கோட்டாபயவை ஜனாதிபதி பதவிக்கு கொண்டு வர சஹ்ரான்கள் தற்கொலை குண்டு தாக்குதல் நடத்தினார்கள் என்றால், இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றி பேச முடியாது.

இரண்டாவது தரப்பு இலங்கை படையினரை பலவீனப்படுத்துவதற்காக சர்வதேச விசாரணைகளை கோரும் புலம்பெயர் தமிழர்கள் உட்பட பிரிவினைவாதிகள்.

மூன்றாவது தரப்பு இஸ்லாமிய அடிப்படைவாதத்தை வளரவிட்டு, அவர்களின் வாக்குகளுக்காக புலனாய்வு பிரிவினரை பலவீனப்படுத்திய தலைவர்கள் மற்றும் ஈஸ்டர் தாக்குதல் நடப்பதை தடுத்து, பொறுப்பை நிறைவேற்ற தவறிய தலைவர்கள்.

அன்றைய பிரதமரின் தேவைக்காகவே கிழக்கு மாகாணத்தில் புலனாய்வுப் பிரிவுகள் செயலிழக்க செய்யப்பட்டதாக ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது-என்றார். (அ)

# உண்மை நிலையை எதிர்நோக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை!

## எச்சரிக்கிறார் ரஞ்சித் பண்டார எம்.பி.



கொழும்பு, செப். 16

சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் நிலைமையை எதிர்கொள்ள தயாராகவேண்டும் எனவும் நாங்களே நன்றாக செய்து வருகின்றோம் என்று கூறுபவர்கள் உண்மையை எதிர்நோக்கவேண்டிய காலம் வெகு தொலைவில் இல்லை எனவும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் பொதுஜன பெரமுனவின் கொள்கையில் இருந்து விடுப்பட்டதால், மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

கடனை திரும்ப செலுத்த ஆரம்பிக்கவில்லை என்பதன் காரணமாகவெ நாடு தற்போது மிக நல்ல நிலைமையில் இருக்கின்றது.

கடனை செலுத்த ஆரம்பிக்கும் போது ஏற்படும் நிலைமையை நாடு எதிர்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தை பாதுகாக்கும் நிபந்தனையற்ற பிணைப்பு மாத்திரமே பொதுஜன பெரமுனவுக்கு அரசாங்கத்துடன் உள்ளது.

அரசாங்கம் பொதுஜன பெரமுனவின் கொள்கையில் இருந்து வெளியில் சென்றால், அரசாங்கத்துடன் மோத நேரிடும்.

பொதுஜன பெரமுன அரசாங்கத்தை பாதுகாக்கும் அதே வேளை நாட்டின் பெரும்பான்மை மக்களின் விருப்பு வெறுப்புக்கு அமைய செயற்படும்-என்றார். (அ)

## வவுணதீவு பிரதேசத்தின் வீதிகள் மற்றும் பாலங்கள் அபிவிருத்தி தொடர்பாக ஆரம்ப கட்ட கலந்துரையாடல்!





மட்டக்களப்பு, செப். 16

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகத்தில் கிராம வீதிகள் மற்றும் பாலங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனின் வேண்டுகோளின் பேரில், இணைப்புச் செயலாளர் பிரசாந்தனின் பங்குபற்றுதலுடன் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது வவுணதீவுப் பிரதேசத்தில் முற்றாக சேதமடைந்த வீதிகளை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்வதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது. அத்துடன் பிரதேசத்தின் சகல பிரிவுகளிலும் காணப்படும் சேதமடைந்த வீதிகள், பாலங்கள் தொடர்பான தரவுகள் பெறப்பட்டன.

பிரதேச செயலாளர் எஸ். சுதாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சபேசன் உட்பட கிராம வீதி அபிவிருத்தி அதிகாரி, பொருளாதார அபிவிருத்தி, கிராம சேவை உத்தியோகத்தர்கள் , கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## தேசிய மட்டத்துக்கு தெரிவான கல்லூரி மாணவிக்கு பாராட்டு



அம்பாறை, செப். 16

தேசிய மட்ட ஆங்கில தின போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட பாலமுனை அல்- ஹிதாயா மகளிர் கல்லூரி மாணவி பாத்திமா லெமாவை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர், பிரதியதிபர், ஆசிரியர்கள், மற்றும் பாடசாலை சமூகத்தினரின் ஏற்பாட்டில் அதிபர் பீ.முஹாஜிரீன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மணவியையும் அவரின் தாயையும் பான்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு மாணவர்கள் புடை சூழ மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

இதேவேளை, இம் மாணவியை பயிற்றுவித்த ஆங்கில ஆசிரியர், அதிபரையும் வாழ்த்தி நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன. (அ)

## ஐஸ் போதைப்பொருளுடன் கைதாகியவருக்கு மறியல்

அக்கரைப்பற்று, செப். 16

ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நபரை 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் 480 மில்லி கிராம் ஐஸ் போதை பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இச்சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து குறித்த பிரதேசத்திற்கு சென்ற படையினர் சந்தேக நபரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே அவரை இந்த விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (அ)

## திருக்கோவில் மின்சார சபை பணிமனை தரம் உயர்த்தப்பட்டு புதிய கட்டடத்தில்!

காரைதீவு, செப். 16

தம்பிலுவில் பிரதேசத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த திருக்கோவிலுக்கான உப மின்சார சபை பணிமனை தரமுயர்த்தப்பட்டு திருக்கோவிலில் அரச புதிய கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

திருக்கோவில் பிரதே செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் திறப்பு விழா இடம் பெற்றது.



இப்புதிய பூரணமான பணிமனை இலங்கை மின்சார சபையின் கிழக்குமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் கே.விஜயதுங்கவினால் திறந்துவைக்கப் பட்டது.

இவ் நிகழ்வில் அம்பாறை பிரதான தலைமை பொறியலாளர் எம்.பர்கான், திருக்கோவில் பொலிஸ் நிலையப்பொறுபதிகாரி பி.பத்மகுமார, திருக்கோவில் பிரதேச செயலக உதவிச் செயலாளர் க.சதிசேகரன் மற்றும் மின்சார சபை பொறியலாளர்களான யூ.மயூரன், எம் எலா. ஹரீஸ் மொகமட், உதவிப்பொறியலாளர் எம்.நவ்பல், திருக்கோவில் மின்சார சபை அத்தியட்சகர் ஏ.அசோகதீபன், அத்தியட்சகர் சுலக்ஷன் , சட்டத்தரணி யோகசுதன் ஆகியோரும் மின்சார சபை உழியர்கள், பொது மக்கள் கிராம உறுப்பினர்கள், கிராம சேவகர்கள், மதகுருமார், நலன்விரும்பிகள் என பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

முன்னதாக மாணவர்களின் வருவற்பு நடன நிகழ்வும் தேசிய கொடி மற்றும் மின்சார சபை கொடிகள் அதிதிகளினால் ஏற்றப்பட்டதுடன் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலய குரு அங்குசநாத குருக்களால் ஆசிர்வாத உரையும் நிகழ்த்தப் பட்டது. (அ)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தாபன விதிக்கோவை குறித்து செயலமர்வு





அம்பாறை, செப். 16

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட சுகாதார நிறுவனங்களில் கடமை புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான தாபன விதிக்கோவை தொடர்பான வலுவூட்டல் செயலமர்வு நேற்று முன் தினம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் கீழ் இடம் பெற்ற இந்நிகழ்வு பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எம்.எஸ்.வீ.வாஜிதா தலைமையில் இது இடம்பெற்றது .

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், பொத்துவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ராமகுட்டி, நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எம்.எஸ்.வீ.வாஜிதா ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினர்.

சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்ற குறித்த உத்தியோகத்தர்கள் அவசியம் தெரிந்திருக்கவேண்டிய நிர்வாக நடைமுறைகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள், சுகாதாரத்துறைக்கு ஆற்றவேண்டிய பணிகள் தொடர்பாகவும் வளவாளர்களினால் இந்நிகழ்வின்போது விரிவுரை நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குடிதண்ணீர் நெருக்கடியால் அவதியுறும் பிரான்ஸ் மக்கள்

## 40 ஆயிரம் பேர் பாதிப்பு

பாரிஸ், செப். 16

**பிரான்ஸில் சுமார் 40 ஆயிரம் பொதுமக்கள் குடிதண்ணீரை பெற்றுக்கொள்ள முடியாது நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**வறட்சி காரணமாக இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளதாக பிரான்ஸ் சுற்றுச்சூழல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.**



இதன்படி, சில பிரதேசங்களுக்கு லொறிகள் மற்றும் போத்தல்கள் மூலமாக நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்ற போதும் ஏனைய பிரதேசங்களில் நீர் நிலைகள் வற்றியுள்ளதுடன் மிக்க குறைந்த அளவிலான நிலத்தடி நீர் விநியோகம் காரணமாக குழாய் நீர் பருகுவதற்கு பாதுகாப்பற்றதாக மாறியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோடை காலத்தில் நாட்டின் சில பகுதிகளில் மழைப்பொழிவு அதிகரித்த போதும், நாட்டின் நீர்நிலைகளில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு பருவகால சராசரி மழையைவிட குறைவாகவே உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட சமூக குழுக்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், நீர் பயன்பாட்டை குறைக்கும் முயற்சியில் கழிவுநீரை மீள்பாவனைக்கு உட்படுத்துவதனை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அத்துடன், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் பிரான்ஸ் சுற்றுச்சூழல் அமைச்சர் 'தண்ணீர் திட்டத்தின்' வெற்றியின் மதிப்பீட்டை வழங்குவார் என எதிர்பார்க்கப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்கா செல்லும் உக்ரைன் ஜனாதிபதி



கீவ், செப். 16

உக்ரைன்ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கி எதிர்வரும் வாரம் அமெரிக்கா செல்லவுள்ளார்.

அவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை வெள்ளை மாளிகையில் சந்தித்து, போரினால் பாதிக்கப்பட்ட தனது நாட்டுக்கு தொடர்ந்து உதவி பெறுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, எதிர்வரும் வாரத்தில் நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தில் இரு தலைவர்களும் பங்கேற்பார்கள் என்று பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத் துறை செயலர் அன்டனி பிளிங்கன் கடந்த வாரம் உக்ரைனுக்கு விஜயம் செய்து 1 பில்லியன் டொலருக்கும் அதிகமான புதிய உதவிகள் தொடர்பில் அறிவித்தார்.

உக்ரைனுக்கு அனுப்பப் போவதில்லை என்று அமெரிக்கா முன்பு தெரிவித்திருந்த, தீர்ந்து போன யுரேனியம் தொட்டி குண்டுகளும் குறித்த உதவிகளில் உள்ளடங்கும்.

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தின் போது உக்ரைன் அதிபருடன் அமர்ந்து பேச திட்டமிட்டுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)



# ரஷ்ய ஜனாதிபதி புடின் வடகொரியா செல்கிறார்

பியொங்யாங், செப். 16

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் அழைப்பை ஏற்று வடகொரியாவிற்கு விஜயம் செய்துள்ளதாக வடகொரிய அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன் அண்மையில் ரஷ்யாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, ரஷ்ய தலைவர் புடின் இந்த அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ரஷ்யா மற்றும் வடகொரியாவுக்கு இடையேயான நட்புறவின் வரலாறு மற்றும் பாரம்பரியத்தை தவறாமல் தொடர்வதற்கான தனது விருப்பத்தை மீண்டும் உறுதிப்படுத்தியதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வடகொரிய போர்க்கப்பல்களின் கண்காட்சியையும் ரஷ்ய தலைவர் மேற்பார்வையிடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்திய பேச்சுவார்த்தைகளின் போது, கிம் புடினிடம் ரஷ்யா தனது எதிரிகளுக்கு எதிராக "பெரிய வெற்றியை" அடையும் என்று நம்புவதாக தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஈரான் மீது அணு ஆயுதத் தடைகளை தொடர்ந்தும் அமுலில் வைத்திருக்க பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி தீர்மானம்!

லண்டன், செப். 16

ஈரான் மீது அணு ஆயுத தடைகளை தொடர்ந்தும் அமுலில் வைத்திருக்க பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் தீர்மானித்துள்ளன.

பிரித்தானிய, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் ரஷ்யாவிற்கு ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை விற்பதை தடுக்கும் முயற்சியில் ஈரான் மீதான பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

2015 ஆம் ஆண்டில் ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொண்ட நிலையில் அந்த விதிமுறைகளின் கீழ், சில தடைகள் அடுத்த மாதம் நீக்கப்படும்.

ஆனால் யுரேனியத்தை செறிவூட்டி சேமித்து வைத்ததன் மூலம் ஈரான் ஒப்பந்தத்தை மீறியதாக ஐரோப்பிய நாடுகள் குற்றம் சுமத்தி வருகிற நிலையில் இது ஆத்திரமூட்டல் நடவடிக்கை என ஈரான் தெரிவித்துள்ளது.

இருப்பினும் காலாவதியாகும் ஐ.நா.வின் தடைகளை



தங்கள் சொந்த சட்டங்களில் இணைத்துக்கொள்வதாக பிரித்தானிய, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.

எவ்வாறாயினும் தடைகளுக்கு மத்தியிலும் ஈரானில் தயாரிக்கப்பட்ட பல ட்ரோன்கள் உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவால் பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# லிபியாவில் 20,000 பேர் உயிரிழப்பு?

திரிபோலி, செப். 16

லிபியாவைத் தாக்கிய டேனியல் புயல் காரணமாகவும், கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கனமழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாகவும் இதுவரை 18,000 முதல் 20,000 பேர் வரை இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

மேலும்,ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் பலர் காணமற்போயுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய தரைக்கடல் பகுதியில் லிபியா அமைந்துள்ளதால் புயலின் தாக்கம் மிகவும் அதிகமாக இருந்துள்ளதாகவும் இதனால் டெர்னா, பெடா, சுசா உட்பட பல்வேறு நகரங்களை புயல் கடுமையாகத் தாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருவதாகவும் காணமற்போனவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

(அ)



# மாகாண, உள்ளூராட்சி சட்டங்களில் மாற்றங்கள் ஏற்படுத்துதல் அவசியம்

## வலியுறுத்துகிறார் பிரதமர் தினேஷ்

கொழும்பு, செப். 16

**காலத்திற்கு ஏற்றவகையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் சட்டங்களை மாற்றுவதன் முக்கியத்துவத்தை பிரதமர் தினேஷ் குணவர்தன வலியுறுத்தியுள்ளார்.**

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

எமது பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு வசதிகளையும் திருப்தியையும் வழங்குவதற்காகவே எமது உள்ளூராட்சி மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. வரி கட்ட வேண்டும் என்று வலியுறுத்தினாலும் அவர்கள் ஏதேனும் ஒன்றை எதிர்பார்த்தே வரியினை செலுத்துகிறார்கள்.

இதில் சேவைகள், பாதுகாப்பு, பிள்ளைகளின் முன்னேற்றம், நல்ல சூழல் போன்ற பல விடயங்கள் உள்ளன. மாகாண சபைகள் இல்லாத நிலையில் ஆளுநரிடம் பல அதிகாரங்கள் குவிந்துள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த



அமைச்சு தலையிடவோ அல்லது ஆலோசனை வழங்கவோ முடியும்.

ஒன்பது மாகாண சபைகள் உள்ளன. அதிகாரிகள் என்ற வகையில், இந்த அனைத்து மாகாண சபைகளுடனும் தொடர்ந்து உரையாடல் இருக்கவேண்டும். குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு சேவை செய்யுங்கள்.

எங்களுக்கு உதவிகள் கிடைக்கின்றன. உதவியின் ஒரு பகுதி, குறைந்த உதவி பெறுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றே அவை வழங்கப்படுகின்றன.

இது தொடர்பில் எம்மிடம் ஒரு வேலைத்திட்டம் இருக்க வேண்டும். மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சித் துறையில் பல்வேறு சட்ட திட்டங்கள் மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டும்-என்றார். (அ)

# சீன ஆய்வுக்கப்பல் வருகை குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை!



கொழும்பு, செப். 16

சீன ஆய்வுக்கப்பலின் வருகைக்கான திகதி உள்ளிட்ட விடயங்கள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், இவ்விடயங்கள் இராஜதந்திர ரீதியிலேயே கையாளப்படும் என குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீன ஆய்வுக்கப்பலான ஷியான் 6 வருகையுடன் தொடர்புடைய விவகாரங்களில் வெளிவிவகார அமைச்சு நேரடியாகத் தொடர்புபடவில்லை, அக்கப்பலின் வருகைக்கான திகதி உள்ளிட்ட விடயங்கள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

அதேவேளை, சீன கப்பலின் வருகை தொடர்பில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நாடுகளுக்கிடையே நிலவும் முறுகல் நிலையை இராஜதந்திர ரீதியில் கையாளுவோம்.

அதுமாத்திரமன்றி இந்த சவால்களை அடையாம் காண்பதற்கும், பிராந்திய நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் இந்து சமுத்திர வளைய நாடுகள் அமைப்பின் 23 ஆவது அமைச்சர்கள் மட்டக் கூட்டம் பங்களிப்புச் செய்யும். எவ்வாறெனினும் நாட்டின் உள்ளக நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே செயற்படுவோம்-என்றார். (அ)

# கட்டுமானத்துறையில் பெரும் வீழ்ச்சி நிலை!

கொழும்பு, செப். 16

நாட்டில் கட்டுமானத்துறை 57 வீத சரிவை கண்டுள்ளது எனவும் ஆனால் தற்போது கட்டுமானப் பணிகளுக்கான மூலப்பொருட்கள் அதிகமான இலாபம் வைத்து விற்பனை செய்யப்படுகின்றது எனவும் ஐக்கிய குடியரசு முன்னணியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் சுமேத ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

50 கிலோ கிராம் எடையுடைய சிமெந்து பை 2150.00 ரூபாவிற்கே விற்பனை செய்யப்படுகின்றது. ஆனால் பல்வேறு ஆய்வுகளின் பின்னர் 50 கிலோ கிராம் எடையுடைய சிமெந்து பையை 1850.00 ரூபாவுக்கு விற்க முடியும் என கண்டறியப்பட்டது.

இதன் மூலம் தற்போது வரை 300 ரூபா இலாபம் ஈட்டப்படுகின்றது என்பதையும் அறிந்துக் கொள்ள முடிந்தது. அரசினால் அறவிடப்படும் வரியை நீக்கினால் 50 கிலோ கிராம் சிமெந்தை 1000 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும்.

வரியை முழுமையாக நீக்குமாறு அராங்கத்திடம் கோரவில்லை. அரசாங்கம் சிமெந்து பைக்கு 50 வீத வரியை அறவிடுகின்றது. ஆகவே வரி அறவிடும் வீதத்தை குறைத்தால் சிமெந்துக்கான விலையை இன்னும் குறைக்க முடியும்-என்றார். (அ)

# கியூபா ஜனாதிபதியுடன் ஜனாதிபதி ரணில் பேச்சு

கொழும்பு, செப். 16

கியூபா ஜனாதிபதி மிகுவல் டியாஸ் கேனலை, ஹவானாவில் சந்தித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பின் போது, இலங்கைக்கும் கியூபாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த இரு தலைவர்களும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இருதரப்பு உறவுகள் தொடர்பாக தனது கருத்தை வெளியிட்டிருந்த கியூபா ஜனாதிபதி, பொருளாதார மற்றும் வணிக உறவுகளை விரிவுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவதாகவும் தெரிவித்தார்.

ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக கியூபா மக்களுக்கு எதிராக அமெரிக்கா விதித்துள்ள தடையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான கோரிக்கைக்கு



ஐ.நா. பொதுச்சபையில் இலங்கை ஆதரவளித்தமைக்கு கியூபா ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

ஹவானாவில் நடைபெறவுள்ள ஜி-77 மற்றும் சீன உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கியூபா சென்றடைந்தார்.

ஹவானா விமான நிலையத்தில் கியூபாவின் சுற்றுலாத்துறை அமைச்சர் ஜூவான் கார்லோஸ் கார்சியா கிராண்டா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹரக் கட்டாவை வெளியே அழைத்துச் செல்லத் தடை!

கொழும்பு, செப். 16

ஹரக் கட்டா என்ற நதுன் சிந்தகவை நீதிமன்றத்திற்கு அறிவிக்காமல் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தில் இருந்து அழைத்துச் செல்லவோ அல்லது இடம் மாற்றவோ வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளான நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சமத் மொராயஸ் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம், நந்துன் சிந்தக விக்ரமரத்ன என்ற ‘ஹரக் கட்டா’ தாக்கல் செய்த மனு விசாரணை தொடர்பிலேயே உத்தரவு பிறப்பித்தனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றம், கோட்டை நீதவான் நீதிமன்றம் மற்றும் சட்டமா அதிபருக்கு அறிவிக்காமல் ஹரக்கட்டாவை இடமாற்றமுடியாதென உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணை முடியும் வரை குறித்த உத்தரவு அமலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு மீதான விசாரணை செப்ரெம்பர் 25 ஆம் திகதி இடம்பெறும்.

தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவை மேலும் நீடிப்பதைத் தடுக்க உத்தரவிடுமாறு கோரி ‘ஹரக் கட்டா’ தனது சட்டத்தரணிகள் ஊடாக இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். (அ)

# வங்குரோத்து நிலை தொடர்பாக கப்ரால் விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு, செப். 16

வங்குரோத்து நிலை தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட பாராளுமன்ற குழுவில் முன்னிலையாகுமாறு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வங்குரோத்து நிலை தொடர்பாக ஆராய பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தலைமையில் பாராளுமன்ற குழு அமைக்கப்பட்டது.

குறித்த குழுவில் முன்னிலையாகுமாறு அஜித் நிவார்ட் கப்ராலுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட அதேநேரம் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனவிற்கும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்ற விடயங்கள் தொடர்பில் அவர்களிடம் சாட்சியங்களை பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக சாகர காரியவசம் குறிப்பிட்டார்.

கோட்டாபய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர் வரி குறைப்பு உள்ளிட்ட பல காரணிகள் நாட்டின் பொருளாதாரத்தின் வங்குரோத்து நிலைக்கு பாதிப்பை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டது.

இது குறித்து பல்கலைக்கழக பொருளாதார நிபுணர்கள், தமது அறிக்கையை பாராளுமன்ற விசாரணைக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர். (அ)

## காணாமல்...

பகுதியில் கசிப்பு காய்ச்சுவதாக அறிந்து அவர்களை கைது செய்வதற்காக நேற்று முன்தினம் சென்ற பொலிஸ்காரரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கசிப்பு காய்ச்சும் தகவலறிந்து 3 பொலிஸார் சென்றபோது கசிப்பு காய்ச் சுபவர்கள் தப்பியோடினர். அவர்கள் குளத்துக்குள் இறங்கி தப்பியோடவே பொலிஸ் உத்தியோகத்தர்களும் அவர்களை விரட்டிச் சென்றனர்.

சிறிது நேரத்தின் பின் 2 பொலிஸார் திரும்பினர். ஒருவர் திரும்பி வரவில்லை. நேற்று முன்தினம் இரவு வரை இராணு வம், பொலிஸார் அந்தப் பகுதியில் பெரும் தேடுதலில் ஈடுபட்டனர்.

பொலிஸ் உத்தியோகத்தர் நீரில் மூழ்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் நேற்றும் தேடுதல் நடத்தப்பட்டது. இதன்போது, நீர் நிலையிலிருந்து அவரின் சடலம் மீட்கப்பட்டது.

நீதிவான் பார்வையிட்ட பின்னர் சட லம் பிரேத பரிசோதனைகளுக்கு ஒப்ப டைக்கப்பட்டது. கிளிநொச்சி பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## திலீபன்..

நல்லூர் ஆலயத்தின் வடக்கு வீதியில் உணவையும் நீரையும் ஒறுத்து 12 நாட் கள் இருந்த திலீபன், செப்ரெம்பர் 26 ஆம் திகதி உயிர்நீத்தார். அவரின் 36 ஆவது ஆண்டு நினைவுதினம் உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்த நாளான நேற்று தமிழர் தேசம், புலம் பெயர் தேசம் எங்கும் ஆரம்பமானது.

பிரதான நிகழ்வு நல்லூரில் அமைந் துள்ள அவரின் நினைவிடத்தில் ஆரம்ப மானது. முன்னாள் போராளியும் இரு மாவீரர்களின் சகோதருமான விடுதலை பொதுச் சுடர் ஏற்றியமையைத் தொடர்ந்து, தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

சமநேரத்தில் நல்லூரில் உண்ணாவிர தம் ஆரம்பமான வடக்கு வீதியிலும் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது.

இதேபோன்று, யாழ். பல்கலைக்கழகம் உள்ளிட்ட வடக்கு, கிழக்கிலும் நினைவேந் தல்கள் கடைப்பிடிக்கப்பட்டன. (ஐ)

## மக்களுக்கான...

அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப் படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடை முறைப்படுத்தப்பட வேண்டிய வழி முறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புகளையும் விதப்புரைகளை யும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்ப தற்காக கடந்த ஜூன் 08 ஆம் திகதி அமைக் கப்பட்ட பாராளுமன்ற விசேட குழுவி னால் இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையிலான இந்த விசேட குழு பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ளது. இதன் செயலாளராக பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன செயற்படுகின்றார்.

பொதுமக்கள் தமது முன்மொழிவு களையும், கருத்துக்களையும் எழுத்து மூலம் legis_com@parliament.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது செய லாளர்,பாராளுமன்ற விசேட குழு, இலங்கைப் பாராளுமன்றம், சிறீ ஜெய வர்தனபுர, கோட்டே என்ற முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்க முடியும்.

ஆர்வமுள்ள தரப்பினர் 2023 ஒக்ரோ பர் 12ஆம் திகதிக்கு முன்னர் தமது முன் மொழிவுகளையும், கருத்துகளையும் அனுப்பிவைக்க முடியும். தமது கருத்துக் களை எழுத்துமூலம் சமர்ப்பிக்கும் நபர்க ளிடமிருந்து அவ்விடயங்கள் தொடர் பில் விரிவாக ஆராய்வதற்கு குழு அவசி யமென தீர்மானிக்கும் பட்சத்தில் ஆவணங்களுடன் அதன் முன்தோன்று மாறு சம்பந்தப்பட்ட தரப்பினர் அழைக்கப்படுவர். (ஐ)

## கொக்குத்....

ஒதுக்கப்பட்ட வேறு பணிகளுக்கு செல்லவிருப்பதால், குறித்த மனிதப் புதை குழி அகழ்வுப் பணிகள் இவ்வாறு தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப் படுகின்றன என்று முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசு தேவா தெரிவித்தார். (ஐ)

## 65 வயது வரை...

தெரிவித்துள்ளார்.

பொதுத்துறை ஊழியர்களின் ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு வயது 60 ஆகும். இருப்பினும் புதிய பிரேரணை யின்படி நாட்டில் நிலவும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு 65 ஆண்டுகள் வரை மருத்துவர்கள் சேவையில் இருக்க புதிய ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளி யேறி வரும் நிலையில் சுகாதார சேவை வீழ்ச்சியடைவதை தடுக்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றது. (ஐ)

## ஈழத்...

- இவ்வாறு இலங்கை தமிழரசு கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தியாகதீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தலின் முதல்நாள் நிகழ்வு நேற்று அக்கராயன் பிரதேசத்தில் அமைந்துள்ள அக்கிராச மன்னன் சுற்று வட்டத்தில் கரைச்சிப் பிரதேச சபை யின் முன்னாள் உறுப்பினர் சுந்தரமூர்த்தி தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நினைவேந்தலில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே சிறீதரன் எம். பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 36 ஆண்டுகளுக்கு முன்னர் திலீபனால் முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளும் இன்றுவரை யும் நிறைவேற்றப்படாமலேயே இருக்கின்றன. தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற் காக முன்வைக்கப்பட்ட சாதாரண கோரிக்கைகள்கூட 36 ஆண்டுகளைக் கடந்தும் நிறைவேற்றப்படாத நிலையே இந்தநாட்டில் இன்னமும் தொடர்கிறது.

ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் நீண்டகால இனப்பிரச்னை தொடர்பில் அன்னை இந்திராகாந்தி கொண்டிருந்த கரிசனை பின்வந்த நாட்களில் கூருணர்வு அற்ற சில இராஜதந்திரிகளின் செயல்க ளால் இந்திய வகிபாகத்தில் பின்ன டைவை ஏற்படுத்தியது. இதன் விளை வாகவே முள்ளிவாய்க்கால் வரையிலான மிகமோசமான இனப்படுகொலை வரை யும் இரத்தமும் சதையுமாக எமது இனத் தின் விடுதலைப் போராட்டம் நடை பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அன்றே சரியான திசையில் சிந்தித்து இந்தியாவின் பாதுகாப்புக்கு ஈழதேசம் அவசியம் என்று இந்திய கொள்கை வகுப்பாளர்கள் உணர்ந்திருந்தால் - இன்று சீன தேசத்தால் ஏற்படுகின்ற நெருக்கடிகளின் விளைவுகள் அதே சிந்தனைப் போக்கை கிளர்த்தியிருக்கும் தேவைப்பாடு எழுந்திருக்காது.

எப்போதும் இந்தியாவே எங்களை பாதுகாக்க வேண்டும் என்பதும் இந்தி யாவின் கேந்திர நலனை பாதுகாக்க வேண்டியது ஈழத்தமிழர் தேசமே என் பதும் ஏற்கனவே, உணரப்பட்ட உண்மை. எனவே, ஒருவருக்கொருவர் இணைந்து செயல்பட வேண்டிய தருணத்தில் இன்று இந்தியாவும் ஈழ தேசமும் இருக்கின்றன.

அத்தகைய காலச்சூழல்களை கருதி, இந்தியா ஈழத் தமிழர் விடயத்தில் 36 ஆண்டுகளுக்கு முன்விட்ட தவறுகளைப் புரிந்து கொண்டு ஈழ தேசத்தை பாது காக்கவும் அதனூடாக தென்கோடியில் இந்தியாவின் பாதுகாப்புக்கு நட்புமிக்க சக்தியாக ஈழத் தமிழரின் தாயகத்தை உருவாக்கவும் தயாராக வேண்டும். அதற் கான முதல் நிலை நடுநிலையாளராக இந்தியா தன்னை உருவாக்கிக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# போக்குவரத்து அமைச்சரை பதவி விலகுமாறு வலியுறுத்து

### ரயில்வே தொழிற்சங்க கூட்டமைப்பு

கொழும்பு, செப். 16

தொலைநோக்கு பார்வையற்ற போக்குவரத்து அமைச்சராக பந்துல குணவர்த்தன செயல்படுவதாக ரயில்வே தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பந்துல குணவர்த்தனவை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி யிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக ரயில்வே கூட்டமைப்பின் அழைப்பாளர் இந்திக தொடங்கொட தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண் டவாறு கூறியுள்ளார்.

அமைச்சரின் தலையீட்டால் புகை யிரத திட்டப்பணிகள் பிரச்னைக்குரிய நிலையை எட்டியுள்ளதாகவும் அதற் கான அனைத்து ஆதாரங்களும் ஜனாதி பதி மற்றும் அமைச்சரவையிடம் கைய ளிக்கப்படும் எனவும் அவர் வலியுறுத் தியுள்ளார்.

இவ்வாறானவர்களிடமிருந்து நாட் டை காப்பாற்றுவதற்கே கடந்த காலத் தில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக இவர்கள் இன்னும் பதவிகளில் இருக்கின்றனர்.

மீரிகம - மஹாவ புகையிரத சமிக்ஞை திட்டத்தில் அமைச்சர் செயற்பட்டவிதம் பிரச்னைக்குரியது எனவும் விலைமனு கோராமல் திட்டங்களை வழங்குவது அமைச்சுக்களுக்கான வழிகாட்டல்க ளுக்கு முரணா னது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

ரயில்வே ஊழியர்கள் ஊதிய உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து கடந்த திங்கட்கிழமை முதல் புதன்கிழமைவரை போராட் டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அரசாங்கத்துடன், ஏற்பட்ட இணக்கப்பாடுகளின் காரண மாக போராட்டம் கைவிடப்பட்டது.

இந்நிலையில், போக்குவரத்து அமைச்சருக்கு எதிராக பல்வேறு சிவில் அமைப்புகள் போர்க்கொடி உயர்த்தி யுள்ளன. அமைச்சரின் செயல்பாடுகளால் பொது போக்குவரத்து கட்டமைப்பு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தும் சிவில் அமைப்புகள், போக்குவ ரத்து அமைச்சருக்கு எதிரான முறைப் பாடுகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பித் தும் உள்ளன.

## 17மனித...

இடம்பெற்ற அகழ்வாய்வு களின் முடிவுகள் தொடர்பில் தாம் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அதன் பின்னர் குறித்த அகழ்வாய்வுகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு முல்லைத்தீவு நீதி மன்றம் அனுமதி வழங்கினால் தாம் தொடர்ந்தும் அகழ்வாய்வுகளை மேற் கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் அகழ்வாய்வில் ஈடுபட்ட தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அகழ்வு பணிகள் இடம்பெற்ற 9 நாட்களிலுமாக 17 எலும்புக்கூடு தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டன. (ஐ)

## யாழில்...

தளபதியின் பிரதிநிதி, பிரதேச செயலாளர்கள், பொலிஸ் உயர் அதி காரிகளுடன் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே அமைச்சர் இந்த உத்தரவை பிறப்பித் தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம் பெறும் குற்றச் செயல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக இந்த விசேட கூட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சர்வதேச...

கேட்டுக்கொள்வதாக சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர் பாக சனல் 4 அலைவரிசையில் ஒளிபரப் பப்பட்டிருந்த விடயங்கள் ஊடாக வெளிப்படுத்தி இருக்கும் விடயங்கள் முறையான விசாரணை இல்லாமல் ஒருபோதும் ஒதுக்கிவிட முடியுமான விடயங்கள் அல்ல.

அதனால் இதன் மூலம் வெளிப்பட்டி ருக்கும் விடயங்கள் தொடர்பாக சரி யான ஆய்வொன்றை மேற்கொண்டு, பொறுப்புக்கூறவேண்டியவர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுத் தாகவேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்காவிட்டால் அது இலங்கையின் எதிர்காலத்துக்கு மிகவும் மோசமான அழுத்தங்களை ஏற்படுத்தலாம் என்பது எமது நிலைப்பாடாகும்.

நாடு என்ற ரீதியில் பார்க்கும்போது அது இந்த நாட்டின் இனம் மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பெறுபேற்றை வழங்க முடியும் என்பதுடன் சர்வதேச ரீதியில் பார்க்கும்போது அவ்வாறானதொரு நிலை நாட்டின் நற்பெயருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு ஏற்புடையதாக கவனத்தில் கொள்ளப்பட்ட சில விட யங்கள் தொடர்பாக இதற்கு முன்னரான சந்தர்ப்பங்களிலும் ஜனாதிபதி விசேட ஆணைக்குழு ஒன்றின் ஊடாகவும் பாராளுமன்ற தெரிவுக்குழு ஊடாகவும் விசாரணை மேற்கொண்டிருக்கிறது. சனல் - 4 வெளிப்படுத்தலின் பின்னரும் அதுதொடர்பாக தேடிப் பார்க்க இரண்டு விசேட விசாரணைகளுக்கு செல்வதாக அரசாங்கம் தெரிவித்திருக்கி றது.

இதன்போது நாங்கள் கவனம் செலுத்துவது அவ்வாறு மேற்கொள் ளப்படும் எவ்வாறானதொரு விசாரணை யிலும் குற்ற விசாரணை தொடர்பான நிபுணத்துவமுடைய மற்றும் அது தொடர்பான அனுபவம் உள்ள விசேட குழு ஒன்றின் பங்கேற்பு இருக்கவேண் டும்.

அத்துடன், அதன் விசாரணைகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் அதற்கு பொறுப்புக்கூறவேண்டிய எந்த தராதரங்களில் இருப்பவர்களாக இருந் தாலும் அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியிலாக நடவடிக்கை எடுப்பதற்கு முடியுமான நிலைமையை அந்த விசா ரணை குழுவுக்கு இருக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக இதன்போது கவ னம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய விடயங்களாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றதுடன் இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக பெரும் சமூக கருத்தாடல் ஒன்றை கட்டி யெழுப்புவதற்காக சில குழுக்கள் மேற் கொண்ட பிரசாரங்கள் தொடர்பாகவும் இதன்போது கவனத்தில் கொள்ளவேண் டும்.

மலட்டு மருந்து, மலட்டு கொத்து ரொட்டி மற்றும் மலட்டு சத்திரசிகிச்சை போன்றவகையில் பல்வேறு பரிமாணங் கள் ஊடாக வெறுப்பை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தவர்கள் தொடர்பாக வும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் ஏற்பட்ட அமைதியற்ற நிலைமைகள் மூலம் பல்வேறு கொடூரமான செயல் பாடுகளுக்கு நேரடியாக சம்பந்தப்பட்டி ருப்பதாக சாட்சிகள் இருக்கும் சில அரசி யல்வாதிகளுக்கு எதிராகவும் இதன் போது கவனம் செலுத்தவேண்டி இருக் கிறது - என்றுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## தியாக தீபம் திலீபனின் நினைவு யாழ்.பல்கலையில் அனுஷ்டிப்பு





யாழ்ப்பாணம், செப். 16

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் அவர் கல்வி கற்ற யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் நேற்று மதியம் 12:30 மணியளவில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் பேரெழுச்சியுடன் அனுஷ்டிக்கப் பட்டது.

இதன்போது ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தி தொடர்ச்சியாக தியாக தீபத்தின் தியாக வரலாற்று பேருரை முன்னெடுக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தி மாணவர்களால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் , பல்கலைக்கழக மாணவர்கள் ,கல்வி சாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அதேவேளை நினைவேந்தலை முன்னிட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் சிவப்பு, மஞ்சள், கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கசிப்பு சிக்கியது

யாழ்ப்பாணம், செப். 16

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கானை சேர்ச் வீதி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து இரண்டு லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின்போது இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. குறித்த சந்தேகநபர் இதற்கு முன்னரும் கசிப்புடன் கைதானவர் என பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## ஹக்கீமின் கொடும்பாவி எரிப்பு



அம்பாறை, செப். 16

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் சாய்ந்தமருது விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொடும்பாவி எரிக்கப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் இன்று சாய்ந்தமருதில் நடைபெறவிருக்கும் தலைவர் தின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகை தருவதை கண்டித்து நேற்று சாய்ந்தமருதில் மாபெரும் கண்டன எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

இதன் போது முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட அக்கட்சியின் முக்கியஸ்தர்களின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொக்குத்தொடுவாய் புதைகுழி உண்மைகள் வெளிவரவேண்டும்

## நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, செப். 16

**முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பில் உண்மைகள் வெளிவர வேண்டும். இந்த விடயத்தில் அரசு அக்கறையுடன் செயற்படுவதனால்தான் அகழ்வாய்வுக்கென நிதியையும் ஒதுக்கியுள்ளது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வாய்வுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் நாள்தோறும் எலும்புக்கூட்டுத் தொகுதிகளும் , பல தடயப் பொருட்களும் மீட்கப்பட்டு வருகின்ற நிலையில் இது தொடர்பில் நீதி அமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய நீதிபதியின் மேற்பார்வையின் கீழ் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் அகழ்வாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறித்த புதைகுழியிலிருந்து மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளும்இ தடயப் பொருட்களும் மீட்கப்பட்டு வருகின்றன. அந்த எலும்புக்கூட்டுத் தொகுதிகள் தொடர்பிலும், தடயப் பொருட்கள் குறித்தும் தற்போது என்னால் கருத்துரைக்கமுடியாது.

அதேவேளை, அகழ்வாய்வு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமா அல்லது மீட்கப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளின் அடுத்த கட்ட பகுப்பாய்வு நடவடிக்கைகள் என்னவென்று நீதிமன்றம்தான் முடிவெடுக்க வேண்டும். எனினும், இந்த மனிதப் புதைகுழி தொடர்பில் உண்மைகள் வெளிவரவேண்டும் - என்றார். (அ)

# சஜித் வேட்பாளராக போட்டியிட்டால் ரணிலை ஆதரிக்கவுள்ள எம்.பிக்கள்

கொழும்பு, செப். 16

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட்டால், ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த சில பாராளுமன்ற உறுப்பி னர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்காக அவருடன் இணைந்துகொள்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

சஜித் பிரேமதாஸவும் ரணில் விக்ரமசிங்கவும் இணைந்து எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை தலைமையேற்று நடத்த வேண்டும் என நிலைப்பாட்டில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இது சம்பந்தமான பேச்சு வார்த்தை ஒன்று அண்மையில் ஒரு நாள் இரவு நுகேகொடையில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரது வீட்டில் நடந்துள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இந்த தீர்மானத்தை அறிவிப் பது எனவும் இதன்போது முடிவு செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (அ)

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கைகளை உடனே வெளிப்படுத்தவேண்டும்!

## அரசிடம் கோருகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, செப். 16

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகளை, அரசாங்கம் உடனடியாக மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

களுத்துறை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக எமக்கு உண்மைகளைத் தெரிந்துக் கொள்ள வேண்டும். இதற்காக பக்கச்சார்பற்ற சுயாதீனமான விசாரணையொன்று அவசியமாகும்.

இத்தாக்குதலின் பின்னணியின் உள்ளவர்கள் யார் என்பதை வெளியே கொண்டுவரவேண்டும். இதனால், நாம் பாராளுமன்றில் அடுத்த வாரம் 2 நாட்கள் விவாத மொன்றை கோரியுள்ளோம். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி தெரிவுக் குழுவின் முழுமையான இரண்டு அறிக்கைகள் உள்ளன.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவரான எனக்கு இதனை வழங்க அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது. 2 ஆவது தொகுப்பின், 2 மற்றும் மூன்றாம் பாகங்களின் பிரதிகளை வழங்க முடியாது என அரசாங்கம் கூறியுள்ளது. இதற்கான உரிமை எதிர்க்கட்சித் தலைவருக்கு இல்லையா? கோட்டாபயவும் அன்று இதனை வழங்க முடியாது என்றே கூறினார்.

அவரின் வழியில்தான் இந்த அரசாங்கமும் செயற்படுகிறது. எனக்கு மட்டுமல்ல. 225 உறுப்பினர்களுக்கும் பிரதிகளை வழங்க அரசாங்கம் தயங்குகிறது. வேண்டுமெனில், பாராளுமன்ற நூலகத்திற்கு சென்று அவற்றை வாசித்துக் கொள்ளுங்கள் என அரசாங்கம் கூறுகிறது.

கொழும்பு பேராயர் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்களும் இதன் உண்மைகள் வெளிவரவேண்டும் என கோரிவரும் நிலையில், அரசாங்கமோ உண்மைகளை தொடர்ச்சியாக மூடி மறைக்கவே முற்படுகிறது. உண்மையில், இது மக்கள் ஆணையுடன் பாராளுமன்றுக்குத் தெரிவான எமது வரப்பிரசாதங்களை மீறும் செயலாகும்- என்றார். (அ)

# மந்துவில் படுகொலையின் 24ஆம் ஆண்டு நினைவேந்தல்





முல்லைத்தீவு, செப். 16

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மந்துவில் சந்திக்கு அருகாமையில் 1999 ஆம் ஆண்டு இதேநாளில் விமானப் படை விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி மக்களின் 24 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று தாய்த்தமிழ் பேரவையின் ஏற்பாட்டில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தாய்த்தமிழ் பேரவையின் நினைவேந்தல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் நவநீதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் தாய்த்தமிழ் பேரவையின் ஸ்தாபகர் ச.சத்தியரூபன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சி.குகனேசன், சமூக செயற்பாட்டாளர் த.லோகேஸ்வரன் மற்றும் பொது அமைப்புக்களை சேர்ந்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# “எனது 2ஆவது இன்னிங்ஸ்”

## அசலங்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 16

ஆசியக் கிண்ணம் சுப்பர் 4 சுற்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் - இலங்கை அணிகள் மோதின. இதில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறும் என்பதால் இரு அணிகளும் வெற்றிக்காக போராடின.

இறுதியாக கடைசி பந்தில் இரண்டு ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், இலங்கை வீரர் அசலங்க சிறப்பாக விளையாடி இரண்டு ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு உதவியாக இருந்தார். மேலும், அணியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றார்.

47 பந்துகளில் 49 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்த சரித் அசலங்க, பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டம் குறித்து கூறுகையில்,

களத்தடுப்பாளரின் இடையே பந்தை தட்டிவிட்டு எப்படி இரண்டு ஓட்டங்களுக்கு கஷ்டப்பட்டு ஓடுவது என்பது குறித்து யோசித்தேன். எதிர்பக்கம் இருந்த பத்திரணவிடமும் வேகமாக ஓடி இரண்டு ஓட்டங்கள் எடுக்க முயற்சிக்க வேண்டும் என்றேன். கடைசி பந்தை பௌன்சர் அல்லது யோர்க்கர், அதை தவிர்த்து ஸ்லோவர் பந்தாக வீசுவார் என்று நினைத்தேன்.

இது எனக்கு ஏற்ற பந்துதான். இதனால் நான் உற்சாகமாக இருந்தேன். மெண்டிஸ் - சதீர ஆகியோர் சிறப்பாக துடுப்பெடுத்தாடினர். நான் போட்டியை முடிக்க விரும்பினேன். இது என்னுடைய முறை. என்னுடைய வரலாற்று சாதனை புத்தகத்தில் இது என்னுடைய 2ஆவது இன்னிங்ஸ்” - என்றார். (ஐ)

# ஆசிய கிண்ண இறுதி; இலங்கை அணி தகுதி

கொழும்பு, செப். 16

நடப்பு ஆசிய கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணியை எதிர்கொள்கிறது இலங்கை அணி. பாகிஸ்தான் அணியை 2 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியன்மூலம் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது இலங்கை அணி.

நடப்பு ஆசிய கிண்ணத் தொடரின் சுப்பர்-4 சுற்றில் பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகள் விளையாடின. கொழும்பில் நடைபெற்று வரும் இந்தப் போட்டி மழை காரணமாக இரண்டு அணிகளுக்கும் தலா 42 ஓவர்கள் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டது. பாகிஸ்தான் அணி நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பெடுத்தாடியது. அப்துல்லா ஷபீக் உடன் இணைந்து வலுவான கூட்டணி அமைக்க பாபர் முயற்சித்தார். ஆனாலும் அதை தகர்த்தார் துனித் வெல்லாலகே.

16ஆவது ஓவரில் பாபருக்கு அபாரமாக பந்து வீசி அவரை முன்வந்து ஆட நிர்ப்பந்தித்தார் துனித். பந்தை பாபர் தவறவிட விக்கெட் காப்பாளர் குசல் மெண்டிஸ், நொடிப் பொழுதில் ஸ்ரொம்பிங் செய்தார். இதன் மூலம் ஐ. சி. சி. ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் முதல் இடத்தில் உள்ள பாபரை வீழ்த்தி அசத்தியுள்ளார்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இடது கை சுழல்பந்து வீச்சாளரான துனித் வெல்லாலகே 5 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். அந்தப் போட்டியில் சிறப்பாக துடுப்பெடுத்தாடி அவர் அசத்தி இருந்தார். அவரின் ஆட்டம் கிரிக்கெட் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்பின் நிர்ணயிக்கப்பட்ட 42 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 252 ஓட்டங்கள் சேர்த்தது. முகமது ரிஸ்வான் 86 ஓட்டங்கள் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். தொடக்க ஆட்டக்காரர் அப்துல்லா ஷபிக் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இப்திகார் அகமது 47 ஓட்டங்கள் எடுத்தார். இலங்கை சார்பில் பத்திரண 3 விக்கெட்களும், மதுஷான் 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 252 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணிக்கு குசல் மெண்டிஸ் நிதானமாக ஆடி அரைச் சதமடித்தார். குறிப்பாக, 3ஆவது விக்கெட்டுக்கு இணைந்த குசால் மெண்டிஸ், சமர விக்ரம இணைந்து 100 ஓட்டங்கள் இணைப்பாட்டம் மூலம் சேர்த்தது.



சமர விக்ரம 48 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து குசல் மெண்டிஸ் 91 ஓட்டங்களில் வெளியேற கடைசி கட்டத்தில் அசலங்க பொறுப்புடன் ஆடி 49 ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

இறுதியில், இலங்கை அணி கடைசி பந்தில் 252 ஓட்டங்களை எடுத்து பாகிஸ்தானை வீழ்த்தி த்ரில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் இறுதிப்போட்டிக்கும் முன்னேறியது.

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் இந்தியா, இலங்கை அணிகள் மோதுகின்றன. (ஐ)

### ஆசியக் கிண்ண இறுதி:

# அதிக தடவைகள் முன்னேறிய அணி சாதனை தொடர்ந்தும் இலங்கையிடம்!

புதுடில்லி, செப். 16

ஆசியக் கிண்ண இறுதிப் போட்டிக்கு அதிக தடவைகள் முன்னேறிய அணி என்ற பெருமையை இலங்கை தொடர்ந்தும் தக்கவைத்துள்ளது.

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. இதன் இறுதிப் போட்டிக்கு இந்தியா, இலங்கை அணிகள் முன்னேறியுள்ளன.

இதன்மூலம், இலங்கை அணி 13ஆவது தடவையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. அத்துடன், இந்திய அணி 11 தடவைகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளன.

இதேசமயம், பாகிஸ்தான் அணி 5 தடவைகளும் பங்களாதேஷ் 3 தடவைகளும் இறுதிப் போட்டிக்கு முன்னேறின. (ஐ)



# ஒருநாள் தரவரிசை இந்தியா 2ஆம் இடத்தில்!

டுபாய், செப். 16

ஐ. சி. சி. ஒருநாள் தரவரிசையில் இந்திய அணி 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. இலங்கை அணி தொடர்ந்தும் 7ஆவது இடத்திலும் அவுஸ்திரேலியா முதலாவது இடத்திலும் தொடர்கின்றன.

10 அணிகள் பங்கேற்கும் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவின் 10 நகரங்களில் நடக்கிறது.

இந்தத் தொடருக்கு முன்பாக ஒருநாள் தரவரிசையில் ‘நம்பர் 1’ இடத்தை பிடிக்க அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் மற்றும் இந்தியா இடையே போட்டி நிலவுகிறது.

இதனிடையே, சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) ஒருநாள் போட்டிகளுக்கான அணிகளின் புதிய தர வரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில், அவுஸ்திரேலிய அணி முதலிடத்தில் தொடருகிறது. ஆசியக் கிண்ணத்தில் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியடைந்ததால் பாகிஸ்தான் அணி 3ஆவது இடத்துக்கு சரிந்தது. (ஐ)

# ஒருநாள் போட்டிகளில் திலக் வர்மா அறிமுகம்!



கொழும்பு, செப். 16

நடப்பு ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்களாதேஷ் அணிக்கு எதிரான சுப்பர்-4 சுற்றுப் போட்டியில் அறிமுக வீரராக களம் கண்டுள்ள இளம் இந்திய வீரர் திலக் வர்மா. ஒருநாள் கிரிக்கெட்டில் நேற்று அறிமுகமானார்.

20 வயதான திலக் வர்மா, கடந்த மாதம் நிறைவடைந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இருபது - 20 தொடரில் தனது துடுப்பாட்ட திறனை வெளிப்படுத்தி இருந்தார். இடது கை துடுப்பாட்ட வீரரான அவரை உலகக் கிண்ணத் தொடருக்கான அணியில் சேர்க்க வேண்டும் என பலரும் சொல்லி வந்தனர். ஐ. பி. எல். கிரிக்கெட்டில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் உள்ளூர் கிரிக்கெட்டில் ஹைதராபாத் அணிக்காகவும் விளையாடி வருகிறார். அயர்லாந்து தொடரிலும் இடம்பெற்றிருந்தார்.

இந்தசூழலில் ஆசிய கிண்ணத் தொடருக்கான அணியில் அவர் இடம்பெற்றார். இந்தத் தொடரில் இந்தியா இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ள நிலையில், சுப்பர்-4 சுற்றின் கடைசிப் போட்டியில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக நேற்று நடந்த போட்டியில் அவர் அறிமுகமானார்.

இந்திய அணிக்காக 7 இருபது -20 போட்டிகளில் திலக் வர்மா விளையாடி உள்ளார். மொத்தமாக 174 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 30+ ஓட்டங்கள் இரண்டு முறையும், ஒரு அரைச்சதமும் பதிவு செய்துள்ளார். எதிர்வரும் உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

# ஜி-20 இந்திய உச்சிமாநாடு தீர்மானங்கள்:
## சாத்தியமற்ற எதிர்வு கூறலும் மோடியின் வெற்றியும்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

டில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டுக்கான தொனிப்பொருள் “ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம்” என்பதாகும். அப்படி இருந்தும் இரு முக்கிய நாட்டின் தலைவர்கள் வரவில்லை என்பது ஜி20 அமைப்பின் உண்மை நிலையை எடுத்துக்காட்டுகிறது.

ஜி20 அமைப்பின் உச்சிமாநாடு இந்தியத் தலைநகர் புதுடில்லியில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றது. இந்த உச்சிமாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உட்பட உலகின் மிகப் பெரிய பொருளாதார நாடுகளின் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

குறிப்பாக இலங்கை உட்பட பல நாடுகளின் கடன் விவகாரங்களும் ஜி20 உச்சிமாநாட்டில் ஆராயப்பட்டன என தெரிவிக்கப்பட்டது.




**ஜி-20 இந்திய மாநாடு தீர்மானங்கள்:**

இந்த மாநாட்டில் நிறைவேற்ற முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

பொருளாதார வளர்ச்சிக்கான முடிவுகள் எடுக்கும் போது, பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பாலின இடைவெளியை குறைக்க வேண்டும். பெண்களுக்கு அனைத்து துறைகளிலும் சம வாய்ப்பை வழங்க வேண்டும்.

அணு ஆயுதங்களை பயன்படுத்துவதையும், அணு ஆயுதங்களை கொண்டு மிரட்டல் விடுப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தீவிரவாதம் எந்த வகையில் வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது. சர்வதேச அமைதிக்கு தீவிரவாதம் மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறது. எனவே, அனைத்து வகையான தீவிரவாதமும் களையப்பட வேண்டும்.

உலக நாடுகளில் நிலவும் பொருளாதார சிக்கல்களுக்கு ஒன்றிணைந்து தீர்வு காண வேண்டும். எல்லை சார்ந்த அரசியல் பிரச்சினைகளில் ஜி 20 நாடுகள் தலையிடாது.

புவி வெப்பமயமாதலை தடுக்கும் வகையில் சர்வதேச இயற்கை எரிபொருள் கூட்டணியை உருவாக்க வேண்டும். பசுமை இல்ல வாயுக்கள் வெளியிடும் அளவை பூச்சியமாக மாற்ற வேண்டும். இயற்கை எரிபொருள் வர்த்தகத்தை அதிகப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் ஜி 20 மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

**உக்ரேன் போர் பற்றிய தீர்மானம்:**

உக்ரேன் போர் தொடர்பாக ஜி20 நாடுகள் பிளவுப்பட்டிருக்கும் சூழலில் ஒருமித்த கருத்து என்பது சாத்தியமற்றது என நிபுணர்கள் கருதினார்கள். ஜி20 மாநாட்டின் கூட்டுத் தீர்மானத்தை உக்ரேனைத் தவிர ரஷ்யா மற்றும் மேற்கத்திய நாடுகள் என அனைத்து தரப்பினரும் வரவேற்றனர்.

இருப்பினும் இந்த தீர்மானம் கடந்த ஆண்டின் தீர்மானத்தை போல ரஷ்யாவை கடுமையாக விமர்சிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. டில்லியில் முடிவடைந்த ஜி-20 மாநாட்டில் கூட்டறிக்கை மீது ஒருமித்த கருத்து எட்டப்பட்டது இந்தியாவுக்கு கிடைத்த வெற்றியாக பார்க்கப்படுகிறது. அதேபோல உலகளவில் இந்தியாவின் செல்வாக்கு இதன்மூலம் அதிகரித்திருப்பதாகவும் பார்க்கப்படுகிறது.

**பிரிக்ஸ் மாநாட்டின் பின் ஜி20 மாநாடு ?**

இந்திய -சீனாவின் உறுதியான பொருளாதார வளர்ச்சியால், புதிய பிரிக்ஸ் நாணயம் உருவாக சாத்தியமா எனும் சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலமையில் பிரிக்ஸ் மாநாடு முடந்து இரு வாரங்களுக்கு பின் ஜி20 மாநாடு நடைபெற்றுள்ளது.

பிரிக்ஸ் அமைப்பு புதிய கரன்சியை வெளியிடுவது குறித்து 44 நாடுகள் ஆதரவு என்று தகவல்கள் தற்போது தெரிவிக்கின்றன. அத்துடன் அமெரிக்க டொலருக்கு பதிலாக புதிய பிரிக்ஸ் நாணயத்தை வெளியிடப்போவதாக ரஷ்யா நீண்ட காலமாக அறிவித்துள்ளதும் அறிந்ததே.

பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளைக் கொண்ட ‘பிரிக்ஸ்’ கூட்டமைப்பின் 15-ஆவது மாநாடு தென்னாப்பிரிக்காவில் கடந்த ஆகஸ்ட்




மாதம் ஜோகன்னஸ்பர்கில் நடைபெற்றது.

ஜி20 உச்சி மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கலந்து கொள்ளவில்லை. கடந்த மாதம் தென்னாப்பிரிக்க பிரிக்ஸ் உச்சி மாநாட்டிலும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

> **ஆசியா நோக்கி உலகதிகாரம் நகர்கிறதா எனத் தோன்றும் வகையில், டில்லி ஜி 20 உச்சி மாநாட்டின் தீர்மானங்கள் உள்ளன. ஆயினும் உலக நாடுகள் இடையே ஒத்த கருத்துக்கள் இன்மையால், இம்மாநாட்டு தீர்மானங்கள் சாத்தியமற்ற எதிர்வு கூறலாகவே அமையும்.**

**டாலரை முறியடிக்க பிரிக்ஸ் நாணயம்:**

பிரிக்ஸ் நாடுகளின் உலக மொத்த தேசிய உற்பத்தியில் 21 சதவீதம் பெற்றுள்ளன. கடந்த 15 ஆண்டுகளில் உலக பொருளாதர பங்கினை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. உலக மக்கள் தொகையில் பிரிக்ஸ் நாடுகள் 43 சதவீதத்தை இருப்பிடமாக கொண்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பிரிக்ஸ் நாணயம் அறிமுகப்படுத்த 44 நாடுகள் ஆதரவு தெரிவித்தன. ஆயினும் இந்திய - சீனாவின் பொருளாதாரம் மிக வலுமிக்க உறுதியாகவும் இருப்பதால், அமெரிக்க டாலருக்கு நிகரான நாணயத்தை அறிமுகம் செய்யும் சாத்தியக் கூறுகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன.

**புடின், ஜின்பிங் வரவில்லை:**

இம்முறை ஜி20 மாநாட்டில் ரஷ்ய,சீன ஜனாதிபதி தலைவர்கள் பங்குபற்றாதிருப்பது, இந்த அமைப்பை




உலக பொருளாதார ஒத்துழைப்புக்கான பிரதான அரங்காகப் பேணுவதற்கும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு நிதிகளை அளிப்பதற்கான முயற்சிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கருதப்பட்டது. ஆயினும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்கெய் லவ்ரோவ் இந்த உச்சிமாநாட்டில் பங்குபற்றினார்.

**ஜி 20 உருவாக்க வரலாறு :**

தற்போது 19 வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் ஜி 20 அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. உலக அளவில பெரும் பொருளாதாரத்தை கொண்டு 20 நாடுகளின் தலைவர்கள், 2008 இல் கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்தனர். இந்த நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கில் இந்நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் வாஷிங்டனில் முதன்முறையாக சந்தித்து பேசினர்.



அப்போது நெருக்கடியில் இருந்த உலக பொருளாதாரத்தை மீட்டெடுக்க தங்களுக்குள் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்பதை ஜி 20 நாடுகளின் தலைவர்கள் உணர்ந்தனர்.

அதையடுத்து, பொருளாதார சிக்கல்கள் தீர்வு காணும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட ஜி 20 நாடுகளுக்கான அமைப்பு, உச்சி மாநாடு நடத்தும் அளவுக்கு அடுத்த நிலையை அடைந்தது.

அதன் பின்னர் உலக அளவில் பெரிய பொருளாதார கூட்டமைப்பாக உருவெடுத்த இந்த அமைப்பு சார்பில் ஆண்டுதோறும் உச்சி மாநாடு நடத்தப்பட்டு வருகிறது.

இதில் உறுப்பு நாடுகளின் பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வு காண்பது குறித்தும், உலகளாவிய பிரச்னைகள் தொடர்பாகவும் விவாதிக்கப் படுகிறது.

**இந்திய ஜி 20 உச்சிமாடு:**

ஜி20 உச்சிமாநாடு இந்தியாவில் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். புது டில்லியின் இந்தியா கேட் நினைவுச்சின்னத்துக்கு அருகிலுள்ள பிரகதி மைதானத்தில், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ‘பாரத் மண்டபம்’ எனும் கண்காட்சி அரங்கில் ஜி20 உச்சிமாநாடு நடைபெற்றது.

ஜி20 அமைப்புக்கு தலைமையகம் எதுவும் இல்லை. அதன் தலைமைத்துவம் சுழற்சி முறையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. 2022 ஆம் ஆண்டு இந்தோனேஷியாவில் நடைபெற்ற ஜி20 மாநாட்டின் பின், புதிய தலைமைத்துவத்தை இந்தியா பெற்றது. இந்தியாவுக்கு அடுத்து. எதிர்வரும் டிசெம்பர் 1 முதல் பிரேஸில் தலைமை தாங்கவுள்ளது.

ஜி20 அமைப்பில் அங்கம் வகிக்கும் 20 நாடுகளுடன் விசேட விருந்தினர்களாக பங்களாதேஷ், எகிப்து, மொரிஷியஸ், நெதர்லாந்து, நைஜீரியா, ஓமான், சிங்கப்பூர், ஸ்பெயின், ஐக்கிய அரபு இராச்சியம், ஐ.நா. சர்வதேச நாணய நிதியம், உலக சுகாதார ஸ்தாபனம், உலக வர்த்தக நிறுவனம், உலக தொழிலாளர் ஸ்தாபனம், உலக வங்கி, ஆபிரிக்க ஒன்றியம், உலக பொருளாதார மற்றும் அபிவிருத்திக்கான ஸ்தாபனம், ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட பல ஸ்தாபனங்களுக்கும் இம்மாநாட்டில் பங்குபற்ற அழைப்பு விடுக்கப்பட்டது.

**ஜி21 ஆக மாற்றம் :**

55 நாடுகள் அங்கம் வகிக்கும் ஆபிரிக்க ஒன்றியத்துக்கும் ஜி20 குழுவில் அங்கத்துவம் வழங்கும் முயற்சிக்கு இந்த உச்சிமாநாட்டில் நரேந்திர மோடி உந்துதல் அளித்துள்ளார். இம்முயற்சி வெற்றியடைந்தால் ஜி20 ஆனது விரைவில் ஜி21 ஆக மாறிவிடும்.

ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம் என டில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டுக்கான தொனிப்பொருள் அமைத்தாலும், தீர்க்கமான முடிவிகளின்றி ஜி20 மாநாடு முடிவடைந்தது.

இந்த அமைப்பு உலக பொருளாதார ஒத்துழைப்புக்கான பிரதான அரங்காகப் பேணுவதற்கும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு நிதிகளை அளிப்பதற்கான முயற்சிகளுக்கும் வழிமுறைகளை ஏற்படுத்துமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ●

ஈழநாடு



# பேராயர் மல்கம் ரஞ்சித்தின் மனச்சாட்சி: ஆயர் இராயப்பு ஜோசப் சொன்னது என்ன?

**அ.நிக்ஸன்**

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரி யாராக இருக்கும் என்பது தொடர்பான சந்தேகங்கள், ஊகங்கள், தாக்குதல் நடந்த சில மாதங்களிலேயே எல்லோர் மனதிலும் அவரவர் தன்மைகளுக்கு ஏற்ப எழுந்தன.

இப் பின்புலத்தில் சனல் 4 தொலைக்காட்சி முழு விபரங்களையும் ஆதாரத்துடன் வெளியிட்டிருக்கிறது. பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ச மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என்று பலர் மீது போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் ஏற்கனவே சுமத்தப்பட்டிருந்தன. ஜெனீவா மனித உரிமைச் சபை அறிக்கைகளிலும் குற்றச்சாட்டு விபரங்கள் உண்டு.

ஆனாலும் ஈழத் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அத்தனை குற்றங்களையும் மூடி மறைத்து 2020 ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவைக் களமிறக்கி அவரை வெற்றிபெற வைப்பதில் இலங்கைக் கத்தோலிக்கத் திருஅவையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் முழுமையாக ஈடுபட்டார் என்பது பகிரங்கமான உண்மை.

இதனால் தமிழர்களின் அரசியல் விடுதலை மற்றும் இறுதிப் போரில் நடத்தப்பட்ட இன அழிப்பு மற்றும் போர்க் குற்றம் தொடர்பான எந்த ஒரு அக்கறையும் மல்கம் ரஞ்சித்திடம் இருந்திருக்கவில்லை என்பது அப்போதே பட்டவர்த்தனமாகியது.

2009 மே மாதம் போர் இல்லாதொழிக்கப்பட்ட போது, கோட்டாபய ராஜபக்சவுக்கு வெளிப்படையாகவே நன்றியும் பாராட்டும் தெரிவித்திருந்த மல்கம் ரஞ்சித், தமிழர்களுக்கு நிதி கிடைக்க வேண்டும் என்பதைவிடவும் ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் நீட்சியிலேயே முழுக் கனத்தையும் செலுத்தியிருந்தார் என்பதும் பகிரங்கம்.

"இலங்கை அரசு" என்ற கட்டமைப்பும் அதன் சட்டங்களும் பல்லின சமூகங்களுக்கு ஏற்றதாக இல்லை என்பதைக்கூட மல்கம் ரஞ்சித் ஏற்கத் தயாராக இல்லை.

இப் பின்னணியிலேதான் ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவுக்கு ஆதரவு வழங்கியதோடு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்டோருக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் கோரியிருந்தார். விசாரணைகள் இடம்பெற்றுக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என்று மல்கம் ரஞ்சித் அப்போது உறுதியாக நம்பிக்கையும் வெளியிட்டிருந்தார்.

ஆனால் இறுதிப் போரில் நடந்த மனிதப் படுகொலைகள், தமிழ் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் எதிலும் மல்கம் ரஞ்சித் கவனம் செலுத்தியதாக இல்லை. 2012 இல் முதன் முறையாக இலங்கை குறித்த தீர்மானம் ஜெனீவா மனித உரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்ட போது, சர்வதேச விசாரணை தேவையில்லை என்று மல்கம் ரஞ்சித் நியாயப்படுத்தியிருந்தார். இலங்கைக்கு உள்ளேயே விசாரணைகளை நடத்த முடியும் என்றும் பரிந்துரை செய்திருந்தார்.

ஆனால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பற்றிய விசாரணைக்குக் கோட்டாபயவை நம்பியிருந்த மல்கம் ரஞ்சித், உரிய நடவடிக்கை எடுக்கத் தாமதமாகியதால் சர்வதேச விசாரணையைக் கோரியிருந்தார். 2022 இல் ஜெனீவா மனித உரிமைச் சபைக்கும் சென்றிருந்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குச் சர்வதேச விசாரணையைக் கோரிய மல்கம் ரஞ்சித், 2009 இறுதிப் போர் மற்றும் 1958 இல் இருந்து மேற்கொள்ளப்பட்ட தமிழர்கள் மீதான படுகொலைகள் பற்றிய விசாரணைகளுக்கு மாத்திரம் உள்ளக விசாரணை போதுமென்று பரிந்துரை செய்தமைதான் வேடிக்கை.

கோட்டாபய ஜனாதிபதியாக இருந்தபோது பௌத்த சமயத்தை முதன்மை மதமாக ஏற்றுக்கொள்வதாகவும் மல்கம் ரஞ்சித் பகிரங்கமாக உறுதியளித்திருந்தார். இது மல்கம் ரஞ்சித்திடம் இருந்த சிங்களத் தேசிய உணர்வைப் பகிரங்கப்படுத்தியது.

சமயத் தலைவராக அதுவும் சர்வதேச கர்த்தினால் அந்தஸ்துடன் இருந்தாலும் பேராயர் மல்கம் ரஞ்சித்திடம் தனது இனத்துக்குரிய தேசியச் சிந்தனை இருக்கலாம். அது தவறல்ல. ஆனால் அந்தச் சிங்களத் தேசிய உணர்வு இலங்கைத்தீவில் இருக்கின்ற தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் விடுதலையை நிராகரிக்கும் தன்மை கொண்டதாக இருக்க முடியாது.

குறிப்பாக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பற்றிய உண்மை விபரங்களை சனல் 4 தொலைக்காட்சி வெளிப்படுத்திய பின்னர் உடனடியாக மீண்டும் சர்வதேச விசாரணையைக் கோரியிருந்த மல்கம் ரஞ்சித், 2009 இறுதிப் போரில் ஒன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டும் பல இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து காணாமல் ஆக்கப்பட்டுமுள்ளமை பற்றியும் எந்தக் கருத்தையும் கூறவில்லை

இப் பின்புலத்திலேதான் ஈத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான நிரந்த அரசியல் தீர்வு பற்றிய உரையாடல் எல்லாமே தற்போது ஒட்டுமொத்த இலங்கைத்தீவு மக்களின் ஜனநாயக உரிமை அல்லது மனித உரிமைப்

> **சிங்கள ஆட்சியாளர்கள், சிங்கள இராணுவ உயர் அதிகாரிகள் சிலரினால் கையாளப்பட்ட தமிழ் - முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் 2009 முள்ளிவாய்க்கல் போரின்போது தமிழர் தாயகப் பிரதேசங்களில் தேசியத்தை மலினப்படுத்தும் அசிங்கமான அரசியலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன என்பதை சனல் 4 வெளியிடவில்லை. இந்த அசிங்க அரசியலின் தொடர்ச்சிதான் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல். அங்கிருந்துதான் சனல் 4 ஆவணப்படத்தைத் தயாரித்திருக்க வேண்டும்**

பாதுகாப்பு விவகாரமாக மாறி வருவதை அவதானிக்க முடியும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 269 பேருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால் முப்பது வருட போரிலும் அதற்கு முன்னர் 1958 இல் இருந்து தமிழர்கள் மீது நடத்தப்பட்ட கொலைகள், வன்முறைகள் பற்றிப் பேசுவதைவிடவும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பற்றிக் குரல் கொடுப்போரின் பின்னணி பற்றியே அதிகளவு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்காகச் சிங்கள ஆட்சியாளர்கள், சிங்கள இராணுவ உயர் அதிகாரிகள் சிலரினால் கையாளப்பட்ட தமிழ் - முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் 2009 முள்ளிவாய்க்கல் போரின்போது தமிழர் தாயகப் பிரதேசங்களில் தேசியத்தை மலினப்படுத்தும் அசிங்கமான அரசியலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன என்பதை சனல் 4 வெளியிடவில்லை.



இந்த அசிங்க அரசியலின் தொடர்சிதான் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல். அங்கிருந்துதான் சனல் 4 தனது ஆவணப் படத்தைத் தயாரித்திருக்க வேண்டும்.

குறிப்பாக ஜே.ஆர் ஜயவர்த்தனாவில் இருந்து ரணில் வரையும் தமிழர்களின் போராட்டத்தைச் சர்வதேச அரங்கில் பயங்கரவாதமாகத் திசை திருப்பி முறியடிக்க, தமிழ் - முஸ்லிம் ஆயுதக் குழுக்களுக்குச் சம்பளம் வழங்கி இலங்கை இராணுவம் ஈடுபடுத்தியிருந்தது.

இதற்கு அமெரிக்க - இந்திய அரசுகளும் அப்போது ஒத்துழைத்த உண்மைகளை சனல் 4 ஆதாரங்களுடன் வெளியிட விரும்பவில்லை என்பதையே தாக்குதல் பற்றிய ஆவணப் படம் சித்தரிக்கிறது.

ஆவணப் படத்தின் பின்னர், சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்த மறு கணமே பேராயர் மல்கம் ரஞ்சித்தும் அவ்வாறு கோரியுள்ளார் என்றால், சிங்கள அரசியல் தலைவர்களும் மல்கம் ரஞ்சித் போன்றோரும் 2009 நடந்த இறுதிப் போரையும் ஈழத் தமிழர்களின் எண்பது வருட அரசியல் விடுதலைப் போராட்டத்தையும் எப்படிப் பார்க்கின்றனர் என்பது புரிகின்றது.

இலங்கை சிறிய அரசு. ஊழல் மோசடி அதிகாரத் துஸ்பிரயோகம் நிறைந்த அரசு. அங்கு இன ஒடுக்கல் நடக்கிறது. இவை பற்றியெல்லாம் தெளிவாகத் தெரிந்தாலும், தமது புவிசார் அரசியல் - பொருளாதார நோக்கில் தெரியாதது போன்று அமெரிக்க - இந்திய மற்றும் சீன அரசுகள் இயங்குகின்றன.

வல்லரசுகளின் இந்த அணுகுமுறைதான் சிங்கள ஆட்சியாளர்களுக்குக் கிடைத்த யோகம். ஆனால் வல்லரசுகளின் இந்தப் பிழையான அணுகுமுறைகள் பற்றி சனல் 4 தொலைக்காட்சி வெளிப்படுத்தவேயில்லை. ஏனெனில் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அரசியல் நிகழ்ச்சி நிரல்தான் இங்கு பிரதானமாகிறது.

இந்த இடத்திலேதான் மல்கம் ரஞ்சித்தின் செயற்பாட்டையும் நோக்க வேண்டியுள்ளது.

தமிழர்களின் அரசியல் நியாயத்தை முடக்க எண்பது வருடங்களாக வெவ்வேறு வியூகங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டுக் கொண்டிருக்கும் அநீதிகளை வெளிப்படுத்தக் கூடிய "மூலங்கள்" வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ்க் கத்தோலிக்க ஆயர்கள், அருட் தந்தையர்கள் பலருக்கும் நன்கு தெரியும்.

அவர்கள் சர்வதேச அரங்கில் பகிரங்கப்படுத்தியுமுள்ளனர். சனல் 4 தொலைக் காட்சிக்கும் இந்த உண்மை புரியும்.

முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் முள்ளிவாய்க்காலில் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டதாக ஜெனீவா மனித உரிமைச் சபையில் வாக்குமூலம் வழங்கியபோது பேராயர் மல்கம் ரஞ்சித்தின் மனட்சாட்சி இழுத்து மூடப்பட்டிருந்தது.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை மற்றும் இன அழிப்பு விசாரணைக் கோரிக்கை அல்லது ஜெனீவா மனித உரிமைச் சபையின் தீர்மானத்துக்கு அமைவாகப் போர்க்குற்ற விசாரணை நடத்துவது பற்றிய விவகாரங்கள் சூடுபிடித்தபோது மல்கம் ரஞ்சித் வாய் திறக்கவில்லை.

பேராயர் என்ற அந்தஸ்த்தில் இருந்து கொண்டும், வத்திக்கான் திருத்தந்தையின் கர்த்தினால்களில் ஒருவர் என்ற சர்வதேச அங்கீகாரத்தோடும், பௌத்த சமயத்தை மையப்படுத்தித் தன் சிங்கள இனம் சார்ந்து மாத்திரம் மல்கம் ரஞ்சித் நியாயம் கோரியிருக்கிறார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 269 போரில் அதிகமானோர் தமிழர்கள். ஆகவே பாதுகாப்பற்ற தமிழ்ச் சமூகம் மீதுதான் தாக்குதல் இலக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையைக் கூட மல்கம் ரஞ்சித் புரிந்து கொண்டவராக இல்லை.

மாறாகத் தேவாலயங்கள் இலக்கு வைக்கப்பட்டமை என்பது மாத்திரமே மல்கம் ரஞ்சித்தின் கவனமாக இருந்தது. இதனை அவர் வழங்கிய நேர்காணல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

(16ம் பக்கம் பார்க்க)

# கல்முனை பிரதேச சிறந்த வங்கியாக நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கி தெரிவு

*அம்பாறை, செப். 16*

கல்முனை பிரதேச செயலக பிரிவில் சமூர்த்தி பிரிவானது பொது மக்களுக்கு சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது. இதன் அங்கமாக கடந்த 2022ஆம் ஆண்டுக்குரிய சமுர்த்தி வங்கிகளின் முன்னேற்ற மீளாய்வுகளின்படி வினைத்திறன் மிக்க சேவை மேற்கொண்ட சமூர்த்தி வங்கி மற்றும் சிறந்த சேவை செய்த உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு கல்முனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

கல்முனைப் பிரதேச செயலக தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர். எம்.சாலிஹ்ஹின் வழிகாட்டலில் கல்முனை சமுர்த்தி வங்கிச் சங்கத்தால் அதன் முகாமையாளர் எம்.என்.நௌசாத் தலைமையில் நடத்தப்பட்ட கடந்த 2022ஆம் ஆண்டிற்குரிய சமுர்த்தி வங்கிகளின் முன்னேற்ற மீளாய்வுகளின்படி நற்பிட்டிமுனை



சமுர்த்தி வங்கி கல்முனைப் பிரதேச செயலக மட்டத்தில் சிறந்த வங்கியாக தெரிவு செய்யப்பட்டு அதன் முகாமையாளர் ஏ.எம்.பைசால் மற்றும் உத்தியோகத்தகர்களுக்கு விருது மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் சமூர்த்தி சேவையில் சிறப்பான சேவை வழங்கிய மகா சங்க உதவி முகாமையாளர் எம்.எம்.மன்சூர் மனித வள விருது சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும் குழுச் செயற்பாடுகளுக்கான கணக்குகளில் அதிகூடிய முன்னேற்றத்திற்கான விருது சான்றிதழ் மருதமுனை வங்கிக்கு வழங்கப்பட்டது. அதனை முகாமையாளர் எஸ்.எஸ்.பரீறா பெற்றுக்கொண்டார். அத்துடன் சிறந்த களப்பணி உத்தியோகத்தராக கல்முனை சமூர்த்தி வங்கி வலய உதவி முகாமையாளர் ஐ.எல்.அர்சுத்தின் தெரிவு செய்யப்பட்டு விருது, சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ் மற்றும் கல்முனைப் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலியும் கலந்து சிறப்பித்தனர்.

(அ)

# பேராயர் மல்கம் ரஞ்சித்தின்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

1982 இல் அருட்தந்தை சிங்கராயர் கைது செய்யப்பட்டதில் இருந்து 2009 போர் இல்லாதொழிக்கப்படும் வரை ஒன்பது அருட் தந்தையர்கள் இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

மேலும் சில அருட் தந்தையர்கள் காயமடைந்துள்ளனர். பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். வேறு சிலர் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சமடைந்துள்ளனர்.

வடக்குக் கிழக்கில் நூற்றுக்கும் அதிகமான தேவாலயங்கள் குண்டுத் தாக்குதலினால் முற்றாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இராணுவ உயர் பாதுகாப்பு வலங்களுக்குள் சில தேவாலயங்கள் இன்மும் முடங்கியுள்ளன.

முப்பது வருடப் போரின் அவலங்கள் இழப்புகளுக்கு மத்தியில் வடக்குக் கிழக்குத் தமிழ் ஆயர்கள், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள் பொறுப்புடன் செயற்பட்டனர். 2009 இன் பின்னரே வடக்குக் கிழக்கு ஆயர் மன்றம் உருவாக்கப்பட்டது. அது தமிழ் ஆயர் மன்றம் என்று வெளிப்படையாகக் கூறப்படுவதுமில்லை.

இலங்கைக் கத்தோலிக்கத் திருஅவையின் கூட்டுப் பொறுப்பு மற்றும் சமய ஒற்றுமை என்ற பண்பின் அடிப்படையில் வடக்குக் கிழக்கு ஆயர் மன்றம் இயங்குகின்றது.

சமகால அரசியல் விவகாரங்களில் சில தமிழ் அருட் தந்தையர்கள் பின்பற்றுகின்ற நிதானம், பொறுப்பு, பேராயர் மற்றும் திருத்தந்தையின் கர்த்தினால் என்ற முறையில் ரஞ்சித் மல்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை.

அறுபது வருடங்களுக்கு முன்பு அமரர் சிறிமாவின் ஆட்சிக்கு எதிராகக் கறுப்புக்கொடிப் போராட்டத்தை நடத்தியவர் கொழும்பின் முதலாவது சிங்களப் பேராயர் தோமஸ் கூரே. 1965 இல் முதலாவது கர்த்தினாலாகவும் இவர் தெரிவாகியிருந்தார்.

இவருக்குப் பின்னர் இலங்கையில் கர்தினாலாக எவரும் நியமிக்கப்படவில்லை. 2009 யுத்தம் முடிந்ததும் 2010 இல் பேராயர் மல்கம் ரஞ்சித் இரண்டாவது கர்தினாலாகத் திருத் தந்தையினால் நியமிக்கப்பட்டார்.

கிறிஸ்தவர்களுக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கமே முதலில் செயற்பட்டது. 1960 ஜூலை மாதம் பதவிக்கு வந்த அரசாங்கம் நன்கொடை பெறும் பாடசாலைகளை சுவீகரித்தபோது, கத்தோலிக்க பாடசாலைகளும் அரச உடமையாக்கப்பட்டன.

இதனை எதிர்த்து இலங்கைத்தீவு முழுவதும் தமிழ் - சிங்கள கத்தோலிக்க மக்கள் ஒன்றுபட்டுப் போராடினர். தோமல் கூரே இதற்குப் பிரதான காரணமாக இருந்தவர்.

ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உருவெடுத்து 2018 பெப்ரவரியில் சிறிலங்கா பொதுஜனப் பெரமுனவாக மாற்றம் பெற்ற ராஜபக்ச குடும்பத்திற்குக் குடைபிடிக்கும் அரசியலையே மல்கம் ரஞ்சித் முன்னெடுத்திருந்தார்.

ஆகவே ராஜபக்ச குடும்பத்தை ஆதரித்தமைக்காக சனல் 4 ஆவணப் படத்தின் பின்னர் பேராயர் பாவ மன்னிப்புக் கேட்டிருக்கலாம்.

ஆனாலும் கத்தோலிக்கர்கள் அல்லாத பௌத்த சிங்கள மக்களுக்காகக் குரல் கொடுத்தமைபோன்று, தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்கான பேராயராகக்கூட மல்கம் ரஞ்சித் செயற்படவில்லை என்பதை எவரும் மறுக்க முடியாது.

தமிழர்கள் கோருகின்ற இன அழிப்பு விசாரணை அல்லது குறைந்த பட்சம் ஜெனீவா மனித உரிமைச் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் சர்வதேசப் போர்க் குற்ற விசாரணைக்கு மல்கம் ரஞ்சித், ஆயர் இராயப்பு ஜோசப்புடன் இணைந்து அப்போது கடும் அழுத்தம் கொடுத்திருந்தால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடந்திருக்காது. ●

